©
தமிழ்நாடு அரசு
2026

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[விலை: ரூ. 8.00 காசு

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 7] சென்னை, புதன்கிழமை, பிப்ரவரி 18, 2026
மாசி 6, விசுவாவசு, திருவள்ளுவர் ஆண்டு–2057.

## பகுதி III—பிரிவு 1(a) இன் இணைப்பு

### அரசாங்க அறிவிப்புகளின் தமிழ் மொழிபெயர்ப்புகள்

**இயற்கை வளங்கள்**

**அறிவிக்கை**

*[அரசாணை (நிலை) எண். 84, இயற்கை வளங்கள் (MMD.1)த் துறை, 16 டிசம்பர் 2025.]*

1957 ஆம் ஆண்டு சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் (மேம்பாடு மற்றும் ஒழுங்குமுறை) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 67/1957) 9B பிரிவு, 15 அம் பிரிவின் (4) உட்பிரிவு மற்றும் பிரிவு 15A அம் பிரிவு ஆகியவற்றில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், 2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட கனிம அறக்கட்டளை விதிகளுக்குப் பதிலிட்டகற்றீடாகவும், தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், பின்வரும் விதிகளை இதனால் செய்கிறார், அவையாவன,

1. **குறுந்தலைப்பு.**— இந்த விதிகள் 2025ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட கனிம அறக்கட்டளை விதிகள் என்று அழைக்கப்படலாம்.

2. **பொருள் வரையறைகள்.**— (1) இந்த விதிகளில், சந்தர்ப்பம் வேறுபொருள் குறித்தாலன்றி மற்றபடி, —

(a) ''சட்டம்'' என்பது 1957 ஆம் ஆண்டு சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் (மேம்பாடு மற்றும் ஒழுங்குமுறை) சட்டம் (மத்தியச் சட்டம் 67/1957) எனப் பொருள்படும்;

(b) ''பாதிக்கப்பட்ட பகுதி'' என்பது சுரங்கம் தொடர்பான செயல்பாடுகளால் நேரடியாக மற்றும் மறைமுகமாகப் பாதிக்கப்பட்ட பகுதிகள் எனப் பொருள்படும்;

(c) ''பாதிக்கப்பட்ட மக்கள்'' என்பது நேரடியாகப் பாதிக்கப்பட்ட மக்கள், அதாவது, 2013 ஆம் ஆண்டு நிலம் கையகப்படுத்துதல், மறுவாழ்வு மற்றும் மீள்குடியேற்றத்தில் நியாயமான இழப்பீடு மற்றும் வெளிப்படைத்தன்மைக்கான உரிமைச் சட்டத்தில் (மத்தியச் சட்டம் 30/2013) வரையறுக்கப்பட்டுள்ள ''பாதிக்கப்பட்ட குடும்பம்'' மற்றும் ''இடம்பெயர்ந்த குடும்பத்தில்'' உள்ள நபர்கள், மாவட்ட ஆட்சியர் அல்லது சம்பந்தப்பட்ட கிராம சபை/நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பால் அடையாளம் காணப்படுகிறவாறு, பாதிக்கப்பட்ட பகுதிகளில் வசிக்கும் நபர்கள் மற்றும் சுரங்கம் தோண்டப்படும் நிலத்தின் மீது சட்டப்படியான மற்றும் தொழில்சார் உரிமைகளைக் கொண்ட ஏனைய நபர்கள், பயன்பாட்டு உரிமை மற்றும் பாரம்பரிய உரிமைகளைக் கொண்ட நபர்கள் மற்றும் சுரங்கத்தால் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ள நபர்கள் எனப் பொருள்படும்;

(d) ''தணிக்கையாளர்'' என்பது தமிழ்நாடு கணக்காய்வுத் தலைவரால் அறிவிக்கையிடப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட தணிக்கையாளர்களிலிருந்து அல்லது அறக்கட்டளை நிறுவனரால் நியமிக்கப்படுகின்றவாறான பிற தணிக்கையாளர்களிலிருந்து அறக்கட்டளையால் நியமிக்கப்பட்ட தணிக்கையாளர் எனப் பொருள்படும்;

(e) ''பங்களிப்பு'' என்பது சட்டம் மற்றும் அதன் கீழ் உருவாக்கப்பட்ட விதிகளின் கீழ் வழங்கப்பட்ட கனிமச் சலுகைகளைப் பெற்றிருப்பவர்களிடமிருந்து வசூலிக்கப்பட வேண்டிய பங்களிப்புகள் எனப் பொருள்படும்;

(f) ''நேரடியாகப் பாதிக்கப்பட்ட பகுதிகள்'' என்பது ஒரு பெரும் கனிமச் சுரங்கத்தின் அல்லது சுரங்கங்கள் அமைந்துள்ள பகுதிகளின் எல்லையிலிருந்து பதினைந்து கிலோமீட்டர் மற்றும் சிறு கனிமக் குவாரியின் அல்லது குவாரிகள் அமைந்துள்ள பகுதிகளின் எல்லையிலிருந்து மூன்று கிலோமீட்டர் சுற்றளவிற்குள் அமைந்துள்ள கிராமங்கள்

மற்றும் கிராம ஊராட்சிகள் அல்லது நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் அல்லது அருகிலுள்ள கிராமம் அல்லது நகரம் அல்லது ஒன்றியம் அல்லது மாவட்டம் அல்லது மாநிலம் எனப் பொருள்படும், மேலும் பின்வருவனவற்றை உள்ளடக்கும்,

(i) சுரங்கங்களால் இடம்பெயர்ந்த குடும்பங்கள் திட்ட அதிகார அமைப்புகளால் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட / மறுவாழ்வளிக்கப்பட்ட கிராமங்கள்/வார்டுகள் மற்றும்

(ii) தங்களின் பொருளாதாரத் தேவைகளை நிறைவு செய்வதற்காக சுரங்கப் பகுதிகளை கணிசமாகச் சார்ந்திருக்கும் மற்றும் மேய்ச்சல், சிறு வனப் பொருட்களைச் சேகரித்தல் போல, திட்டப் பகுதிகளின் மீது பயன்பாட்டு உரிமை மற்றும் பாரம்பரிய உரிமைகளைக் கொண்ட கிராமங்கள்/வார்டுகள் நேரடியாகப் பாதிக்கப்பட்ட பகுதிகளாகக் கருதப்பட வேண்டும்;

(g) ‘‘அறக்கட்டளை’’ என்பது சட்டத்தின் 9B பிரிவின் கீழ் அமைக்கப்பட்ட மாவட்ட கனிம அறக்கட்டளை எனப் பொருள்படும்;

(h) ‘‘நிதியம்’’ மற்றும் ‘‘அறக்கட்டளை நிதியம்’’ என்பது இந்த விதிகளின் 8 மற்றும் 9 ஆம் விதிகளின்படி உருவாக்கப்பட்ட மாவட்ட கனிம அறக்கட்டளை நிதியம் எனப் பொருள்படும்;

(i) ‘‘அரசு’’ என்பது மாநில அரசு எனப் பொருள்படும்;

(j) ‘‘நிருவாகக் குழு’’ என்பது மாவட்ட கனிம அறக்கட்டளையின் அனைத்து அறங்காவலர்கள் எனப் பொருள்படும்;

(k) ‘‘மறைமுகமாகப் பாதிக்கப்பட்ட பகுதி’’ என்பது நீர், மண் மற்றும் காற்றின் தரம் குறைதல், நீரோடை ஓட்டம் குறைதல், நிலத்தடி நீர் குறைதல், சுரங்க நடவடிக்கைகள் மற்றும்/அல்லது கனிமப் போக்குவரத்து காரணமாக ஏற்படும் நெரிசல் மற்றும் மாசுபாடு, ஏற்கெனவேயுள்ள உட்கட்டமைப்பு மற்றும் வளங்களின் மீது கூடுதல் சுமை ஆகியவை காரணமாக உள்ளூர் மக்கள் பொருளாதார, சமூக மற்றும் சுற்றுச்சூழல் ரீதியாக மோசமாகப் பாதிக்கப்படுகின்ற வகையில், நேரடியாகப் பாதிக்கப்பட்ட பகுதிக்கு அப்பாலுள்ள மற்றும் ஒரு பெரும் கனிமச் சுரங்கத்தின் அல்லது சுரங்கங்கள் அமைந்துள்ள பகுதிகளின் எல்லையிலிருந்து இருபது கிலோமீட்டர் சுற்றளவிற்குள் அமைந்துள்ள ஒரு பகுதி அல்லது நேரடியாகப் பாதிக்கப்பட்ட பகுதிக்கு அப்பாலுள்ள மற்றும் சிறு கனிமக் குவாரியின் அல்லது குவாரிகள் அமைந்துள்ள பகுதிகளின் எல்லையிலிருந்து ஆறு கிலோமீட்டர் சுற்றளவிற்குள் அமைந்துள்ள ஒரு பகுதி எனப் பொருள்படும்;

(l) ‘‘உள்ளாட்சி அமைப்பு’’ என்பது சம்பந்தப்பட்ட மாவட்டத்திலுள்ள மாவட்ட ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம், கிராம ஊராட்சி, பேரூராட்சி, நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகள் அல்லது உள்ளாட்சி அமைப்புகளின் செயல்பாடுகள் ஒப்படைக்கப்பட்ட ஏனைய யாதொரு அதிகார அமைப்பு எனப் பொருள்படும் மற்றும் இவற்றை உள்ளடக்கும்;

(m) ‘‘அறக்கட்டளை நிறுவனர்’’ என்பது சட்டத்தின்படி சுரங்கம் தொடர்பான நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட நபர்கள் மற்றும் பகுதிகளின் நலனுக்காக அறக்கட்டளையை உருவாக்குவதற்கு அதிகாரம் பெற்ற மற்றும் அறக்கட்டளை நிதியத்திற்கு தொடக்க வைப்புத்தொகையை வழங்குகின்ற மாநில அரசு எனப் பொருள்படும்;

(n) ‘‘அறக்கட்டளை’’ என்பது சட்டத்தின் 9B பிரிவின் கீழ் அமைக்கப்பட்ட ‘மாவட்ட கனிம அறக்கட்டளை’ எனப் பொருள்படும்;

(o) ‘‘அறங்காவலர்கள்’’ என்பது மாவட்ட கனிம அறக்கட்டளையின் அறங்காவலர்கள் எனப் பொருள்படும்;

(2) இந்த விதிகளில் பயன்படுத்தப்பட்டு, பொருள் வரையறை அளிக்கப்படாத சொற்கள் மற்றும் சொற்றொடர்கள், சட்டம் மற்றும் அதன் கீழ் உருவாக்கப்பட்ட விதிகளில் அவற்றுக்கு ஒதுக்கப்பட்டுள்ள அதே பொருளைக் கொண்டிருக்கும்.

**3. மாவட்ட கனிம அறக்கட்டளையின் நிறுவன அமைப்பு.— (1)** மாவட்ட கனிம அறக்கட்டளை பின்வருவோரைக் கொண்டிருக்கும், —

(i) மாவட்ட ஆட்சியர் – தலைவர்;

(ii) மாவட்ட வருவாய் அலுவலர் – துணைத் தலைவர்;

(iii) நேர்விற்கேற்ப, புவியியல் மற்றும் சுரங்கத் துறை இணை இயக்குநர் அல்லது உதவி இயக்குநர் – ஒருங்கிணைப்பாளர்;

(iv) ஒரு மாவட்டத்தில் ஒரே ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் உள்ள நேர்வில், அத்தகைய மாவட்டத்தின் மக்களவை உறுப்பினர் – உறுப்பினர்:

இருப்பினும், ஒரு மாவட்டத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட மக்களவை உறுப்பினர்கள் உள்ள நேர்வில், சுரங்கத்தால் பாதிக்கப்பட்ட பகுதியைத் தங்கள் தொகுதிகளின் ஒரு பகுதியாகக் கொண்ட அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் இதன் உறுப்பினர்களாக இருப்பர்;

(v) மாநிலத்தின் மாநிலங்களவை உறுப்பினர் – உறுப்பினர்;

(vi) மாவட்டத்திலுள்ள அனைத்துத் தொகுதிகளின் சட்டப்பேரவை உறுப்பினர் (கள்) – உறுப்பினர்(கள்);

(vii) திட்ட இயக்குநர், ஊராட்சி வளர்ச்சி – உறுப்பினர்;

(viii) ஆட்சியரின் நேர்முக உதவியாளர், ஊராட்சி வளர்ச்சி (PAPD) – உறுப்பினர்;

(ix) நேர்விற்கேற்ப, ஊரக வளர்ச்சித் துறையின் துணை இயக்குநர் அல்லது உதவி இயக்குநர் – உறுப்பினர்;

(x) நேர்விற்கேற்ப, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் துணை இயக்குநர் அல்லது உதவி இயக்குநர் – உறுப்பினர்;

(xi) சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் – உறுப்பினர்;

(xii) மாவட்ட வன அலுவலர் – உறுப்பினர்;

(xiii) செயற் பொறியாளர், பொதுப்பணித் துறை– உறுப்பினர்;

(xiv) நில அளவை மற்றும் நிலவரித் திட்ட உதவி இயக்குநர் – உறுப்பினர்;

(xv) மாவட்ட கருவூல அலுவலர் – உறுப்பினர்;

(xvi) மாவட்ட சமூக நல அலுவலர் – உறுப்பினர்; மற்றும்

(xvii) பொது சுகாதார மையப் பொறுப்பிலுள்ள துணை இயக்குநர், சுகாதாரத் துறை – உறுப்பினர்:

இருப்பினும், ஒரு மக்களவை உறுப்பினரின் அல்லது ஒரு சட்டப்பேரவை உறுப்பினரின் தொகுதி ஒன்றுக்கு மேற்பட்ட மாவட்டங்களில் அமைந்துள்ள நேர்வில், நேர்விற்கேற்ப, அந்த மக்களவை உறுப்பினர் அல்லது சட்டப்பேரவை உறுப்பினர் அத்தகைய அனைத்து மாவட்டங்களின் அறக்கட்டளையிலும் உறுப்பினராக இருப்பார்.

இருப்பினும் மேலும், மாநிலத்தின் மாநிலங்களவை உறுப்பினர், அவர் உறுப்பினராக இருக்க விரும்பும் ஒரு மாவட்டத்தைத் தெரிவு செய்து, அதனை இயற்கை வளங்கள் துறையின் அரசுச் செயலாளருக்குத் தெரிவிக்க வேண்டும், அவர் அத்தகவலை அறக்கட்டளையின் தலைவருக்குத் தெரிவிப்பார்:

இருப்பினும் மேலும், ஒன்றுக்கு மேற்பட்ட மாநிலங்களவை உறுப்பினர்கள் ஒரே மாவட்டத்தைத் தெரிவு செய்யும் நேர்வில், இயற்கை வளங்கள் துறையின் அரசுச் செயலாளர், தலைமைச் செயலாளருடன் கலந்தாலோசித்து, அந்த உறுப்பினரின் பிறப்பிடம் அல்லது அவர் வசிக்கும் இடத்தின் அருகாமையின் அடிப்படையில் அறக்கட்டளை உறுப்பினரைத் தெரிவு செய்வார்.

**4. மாவட்ட கனிம அறக்கட்டளையின் நிருவாகக் குழு.**— (1) அறக்கட்டளையின் அன்றாட விவகாரங்களை நிருவகிப்பதற்கு, பின்வரும் உறுப்பினர்களைக் கொண்ட நிருவாகக் குழு ஒன்று அமைக்கப்படும்:—

(i) மாவட்ட ஆட்சியர் – தலைவர்;

(ii) நேர்விற்கேற்ப, புவியியல் மற்றும் சுரங்கத் துறை துணை இயக்குநர் அல்லது உதவி இயக்குநர் – உறுப்பினர்—செயலாளர் மற்றும் ஒருங்கிணைப்பாளர்;

(iii) திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை – உறுப்பினர்;

(iv) துணை இயக்குநர் (சுகாதாரம்) – உறுப்பினர்;

(v) முதன்மைக் கல்வி அலுவலர் – உறுப்பினர்;

(vi) மாவட்ட கருவூல அலுவலர் – உறுப்பினர்;

(vii) மாவட்ட சமூக நல அலுவலர் – உறுப்பினர்;

(viii) உதவி இயக்குநர் (ஊராட்சி) – உறுப்பினர்;

(2) நிருவாகக் குழு ஒரு நிதியாண்டில் ஒவ்வொரு காலாண்டிலும் ஒரு முறையேனும் கூட்டம் நடத்த வேண்டும், மேலும் நிருவாகக் குழுவின் தலைவரால் தீர்மானிக்கப்பட்டவாறு கூட்டம் நடத்தப்பட வேண்டும்.

**5. நிருவாகக் குழுவின் அதிகாரங்கள் மற்றும் பணிகள்.**— நிருவாகக் குழு பின்வருவனவற்றை மேற்கொள்ளும்: —

(i) சட்டம் மற்றும் அதன் கீழ் உருவாக்கப்பட்ட விதிகளின் விதித்துறைகளிக்கிணங்க, சம்பந்தப்பட்ட சுரங்க குத்தகைதாரர்களிடமிருந்து பங்களிப்புத் தொகையை உரிய நேரத்தில் வசூலிப்பதை உறுதி செய்தல்;

(ii) மாவட்டத்திலுள்ள சுரங்கத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளின் நாளதுவரையாக்கப்பட்ட பட்டியலைத் தயாரித்து வைத்துவருதல்;

(iii) அறக்கட்டளையால் அல்லது ஏதேனும் அரசுத் துறையால் நியமிக்கப்பட்ட ஏதேனும் நிறுவனங்கள் அல்லது முகமைகள் வாயிலாக நடத்தப்பட்ட அடிப்படை ஆய்வின் அடிப்படையில் தொலைநோக்கு ஆவணம் மற்றும் திட்ட வரைபடத்தைத் தயாரித்து, அதனை அறக்கட்டளையின் ஒப்புதலுக்கு வழங்குதல்;

(iv) அங்கீகரிக்கப்பட்ட திட்ட வரைபடத்திற்கிணங்க அறக்கட்டளையின் ஆண்டு திட்டம் மற்றும் ஆண்டு வரவு—செலவுத் திட்டம் தயாரித்தல்;

(v) ஆண்டு திட்டம் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட திட்டப்பணிகள் மற்றும் திட்டங்களின் செயல்பாட்டை மேற்பார்வையிடுதல் மற்றும் உறுதி செய்தல்;

(vi) அதன் பணிகளை மேற்கொள்ளும்போது, அவ்வப்போது நிருவாகக் குழு வழங்கும் கொள்கை கட்டமைப்பு மற்றும் அறிவுறுத்தல்களைப் பின்பற்றுதல்;

(vii) அறக்கட்டளையின் நலன்களைப் பாதுகாப்பதற்கான அதன் கடமைகளை மேற்கொள்வதில் உரிய கவனத்துடன் செயல்படுதல்;

(viii) திட்டப்பணி நிறைவுற்றதைச் சரிபார்த்தல்;

(ix) நிதிப் பயன்பாடு மற்றும் அதனை திறம்பட முதலீடு செய்தல் மற்றும் அறக்கட்டளையின் பெயரில் வங்கிக் கணக்குகளை ஆரம்பித்து அத்தகைய கணக்குகள் மற்றும் முதலீடுகளைச் செயல்படுத்துதல்;

(x) அறக்கட்டளை நிதிப் பயன்பாட்டை மேலாண்மை செய்தல், நிருவகித்தல் மற்றும் கண்காணித்தல்;

(xi) நிதியாண்டு நிறைவடைந்த 60 நாட்களுக்குள், தணிக்கை செய்யப்பட்ட கணக்குகளை ஆண்டு அறிக்கையுடன் சேர்த்து ஆளுகைக் குழுவின் ஒப்புதலுக்காக சமர்ப்பிக்க வேண்டும்;

(xii) அறக்கட்டளையின் சீரான செயல்பாடு மற்றும் நிருவாகத்திற்குத் தேவையான ஏனைய அனைத்துப் பொருண்மைகளையும் மேற்கொள்ளுதல்.

**6. மாவட்ட கனிம அறக்கட்டளையின் ஆளுகைக் குழு**

(1) மாவட்ட கனிம அறக்கட்டளையின் உறுப்பினர்கள் ஆளுகைக் குழுவின் உறுப்பினர்களாகச் செயல்படுவார்கள். மேலும் மாவட்ட ஆட்சியர் ஆளுகைக் குழுவின் தலைவராக இருப்பார்.

(2) அறக்கட்டளையின் ஒட்டுமொத்த மேலாண்மையை ஆளுகைக் குழு நிருவகிக்கும்.

(3) உறுப்பினர்கள் தங்கள் பதவியையும் பதவித் தரத்தையும் வகிக்கும் வரையில் அவர்கள் அறங்காவலர்களாகத் தொடர்வார்கள்; மேலும் அவர்கள் எத்தகைய தகுதியின் அடிப்படையில் நியமிக்கப்பட்டார்களோ அதே தகுதியின் அடிப்படையில், அவ்வாறு நியமிக்கப்பட்ட பதவியையும் பதவித்தரத்தையும் அற்றுப்போகச் செய்தவுடன் அறங்காவலர்களாக அற்றுப் போனதாகக் கருதப்படுவார்கள். அத்தகைய அனைத்து நேர்வுகளிலும், அவர்களுடைய இடத்தில், தொடர்புடைய பதவியில் அடுத்து பதவியேற்பவர்கள், அத்தகைய அதிகாரப்பூர்வ பதவியைப் பெற்ற நாளிலிருந்து, அறங்காவலர்களாக நியமிக்கப்பட்டதாகக் கருதப்படுவார்கள்.

(4) ஆளுகைக் குழுவில் உறுப்பினர்களாக உள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களின் வசதிக்கேற்ப, தலைவரால் தீர்மானிக்கப்படுகிறவாறாக, ஆளுகைக் குழு ஆண்டொன்றிற்குக் குறைந்தது இரண்டு முறை கூடும்.

(5) அத்தகைய கூட்டத்திற்கான குறைவெண் வரம்பு, மொத்த உறுப்பினர்களில் ஐம்பது விழுக்காட்டிற்கு அதிகமாக இருக்க வேண்டும்:

இருப்பினும், தேர்ந்தெடுக்கப்பட்ட மொத்த உறுப்பினர்களில் ஐம்பது விழுக்காடு உறுப்பினர்களேனும் குறைவெண் வரம்பில் இருக்க வேண்டும்.

(6) மாவட்ட கனிம அறக்கட்டளை இந்த விதிகளில் பின்னிணைப்பாகவுள்ள ஒப்பாவணம் ஒன்றைச் செயல்படுத்தும்.

**7. ஆளுகைக் குழுவின் அதிகாரங்கள் மற்றும் செயல்பாடுகள்.–**

ஆளுகைக் குழு பின்வரும் பணிகளை மேற்கொள்ளும். அவையாவன:–

(1) தொடர்புடைய சுரங்க குத்தகைதாரர்களின் பங்களிப்பை வசூலிப்பதையும் மற்றும் கணக்கு வைப்பதையும் கண்காணித்தல்;

(ii) அறக்கட்டளை நிதியின் செலவினங்களை சீரான இடைவெளியில் மேற்பார்வையிடுதல் செய்தல், கண்காணித்தல் மற்றும் சீராய்வு செய்தல்;

(iii) நிருவாகக் குழுவால் தயாரிக்கப்பட்ட, மாவட்டத்தில் சுரங்கத்தால் பாதிக்கப்படும் பகுதிகளின் நாளதுவரையாக்கப்பட்ட பட்டியலை அங்கீகரித்தல்;

(iv) தொலைநோக்குத் திட்டத்தை உருவாக்குவதற்கான அடிப்படை கணக்கெடுப்பை நடத்துவதற்கு கல்வி நிறுவனத்தை அல்லது புகழ்பெற்ற அமைப்பை அல்லது நிறுவனங்களை ஈடுபடுத்துதல்;

(v) நிருவாகக் குழுவால் தயாரிக்கப்படும் தொலைநோக்கு ஆவணத்தையும் தொலைநோக்குத் திட்டத்தையும் அங்கீகரித்தல்;

(vi) நிருவாகக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட தொலைநோக்குத் திட்டத்தின்படி தயாரிக்கப்படும் அறக்கட்டளையின் ஆண்டு திட்டத்தையும் ஆண்டு வரவுசெலவுத் திட்டத்தையும் அங்கீகரித்தல்;

(vii) அறக்கட்டளை நிதிப் பயன்பாட்டின் முன்னேற்றத்தைக் கண்காணித்தல்;

(viii) அங்கீகரிக்கப்பட்ட திட்டங்கள் மற்றும் திட்டப்பணிகள் செயல்படுத்தப்படுவது தொடர்பான முன்னேற்றத்தை ஆய்வு செய்து கண்காணித்தல்;

(ix) ஆண்டறிக்கையுடன் தணிக்கை செய்யப்பட்ட கணக்குகளை அங்கீகரித்தல்;

(x) அறங்காவலர்களால் தீர்மானிக்கப்படுகிறவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் பேரில், ஆளுகைக் குழுவின் கூட்டத்தில் அறக்கட்டளை நிதியைத் தணிக்கை செய்வதற்கு தணிக்கையாளர் ஒருவரை நியமித்தல்;

(xi) அறக்கட்டளையின் நலன் கருதி, அதன் கடமைகளை நிறைவேற்றுவதில் தொடர்ந்து செயல்படுதல்;

(xii) அறக்கட்டளையின் சீரான செயல்பாடு மற்றும் நிர்வாகத்திற்குத் தேவையான மற்ற அனைத்துப் பொருண்மைகளையும் மேற்கொள்ளுதல்.

**8. அறக்கட்டளை நிதிகள்.**

அறக்கட்டளை நிதிகள் பின்வருவனவற்றைக் கொண்டிருக்கும். அவையாவன:–

(i) அறக்கட்டளை நிறுவனரால் வழங்கப்படும் தொடக்க வைப்புத் தொகை ரூ.1,000/– (ரூபாய் ஆயிரம் மட்டும்);

(ii) முதன்மையான கனிமச் சலுகைகளை வைத்திருப்பவர்கள், இந்திய அரசால் குறிப்பிடப்படும் விலை வீதங்களில் அறக்கட்டளைக்குச் செலுத்தும் தொகை;

(iii) இந்த விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள விலை வீதங்களில் சிறு கனிமச் சலுகைகளை வைத்திருப்பவர்கள் அறக்கட்டளைக்கு செலுத்தும் தொகை;

(iv) வங்கியில் செலுத்தப்பட்ட வைப்புத்தொகைகளுக்கு சேர்ந்து வருகிற வட்டி உட்பட அனைத்து வரவினங்கள் மற்றும் வருமானங்கள்;

(v) யாதொரு நபரிடமிருந்து, அமைப்பிடமிருந்து அறக்கட்டளையால் பெறப்பட்ட தன்னார்வப் பங்களிப்புகள், ஏதேனுமிருப்பின்; மற்றும்

(vi) மேற்சொன்ன சட்டம் மற்றும் அதன் கீழ் உருவாக்கப்பட்ட விதிகளை மீறியதற்காக நீதிமன்றம் அல்லது ஏனைய யாதொரு அதிகார மன்றத்தின் உத்தரவின் அடிப்படையில் யாதொரு நபரால் செலுத்தப்பட்ட வைப்புத்தொகை.

vii) முதலீடுகள் மற்றும் ஏனைய வைப்புத்தொகைகள் மற்றும் அவற்றிற்கான சேர்ந்து வரும் வட்டி மற்றும் அவற்றிலிருந்து பெறப்பட்ட ஏனைய யாதொரு வருமானம்;

viii) அறக்கட்டளையின் ஏனைய அனைத்துச் சொத்துக்களும், அவற்றிலிருந்து பெறப்படும் வருமானம் அல்லது அதன் மதிப்புயர்வு.

**9. அறக்கட்டளை நிதிக்கான பங்களிப்பு.**

சுரங்கக் குத்தகை அல்லது கூட்டு உரிமம் அல்லது குவாரிக் குத்தகை அல்லது அனுமதி வைத்திருக்கும் ஒவ்வொருவரும், நேர்விற்கேற்ப உரிமைத்தொகை அல்லது உரிமக் கட்டணத்துடன் கூடுதலாக, பின்வரும் விலை வீதத்திலான தொகையை, சுரங்கம் அல்லது குவாரி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் மாவட்டத்தின், மாவட்ட கனிம அறக்கட்டளைக்குச் செலுத்த வேண்டும். அதன் விவரம் வருமாறு:–

(i) நேர்விற்கேற்ப, 12.01.2015–க்குப் பின்னர் வழங்கப்பட்ட சுரங்கக் குத்தகையை அல்லது கூட்டு உரிமத்தைப் பொறுத்தவரையில் இச்சட்டத்தின் இரண்டாவது விவர அட்டவணையின்படி செலுத்தப்பட்ட உரிமைத்தொகையில் பத்து விழுக்காடு அல்லது குவாரிக் குத்தகையை அல்லது அனுமதிகளைப் பொறுத்தவரையில், 1959–ஆம் ஆண்டு தமிழ்நாடு சிறு கனிம சலுகை விதிகளின் பிற்சேர்க்கை– II இன் படி செலுத்தப்பட்ட உரிமக் கட்டணம்; மற்றும்

(ii) நேர்விற்கேற்ப, 12.01.2015–க்குப் பின்னர் வழங்கப்பட்ட சுரங்கக் குத்தகையை அல்லது கூட்டு உரிமத்தைப் பொறுத்தவரையில் இச்சட்டத்தின் இரண்டாவது விவர அட்டவணையின்படி செலுத்தப்பட்ட உரிமைத்தொகையில் முப்பது விழுக்காடு அல்லது குவாரிக் குத்தகையை அல்லது அனுமதிகளைப் பொறுத்தவரையில், 1959–ஆம் ஆண்டு தமிழ்நாடு சிறு கனிம சலுகை விதிகளின் பிற்சேர்க்கை– II இன் படி செலுத்தப்பட்ட உரிமக் கட்டணம்.

**10. அறக்கட்டளைக்குச் செலுத்தப்பட வேண்டிய தொகையை வசூலித்தல் மற்றும் கண்காணித்தல்.**

(1) நேர்விற்கேற்ப, உரிமைத் தொகை அல்லது உரிமக் கட்டணத்தின் அனைத்து தொகை செலுத்துகைகளும், இந்த விதிகளின் 9–ஆம் விதியில் குறிப்பிடப்பட்டுள்ள விலை வீதத்தில் அறக்கட்டளை நிதிக் கூறுகளுடன் வசூலிக்கப்படும். மேலும் அறக்கட்டளை நிதிக்கு கட்டாய பங்களிப்பு ஏதுமின்றி, யாதொரு உரிமைத் தொகை அல்லது உரிமக் கட்டணமும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

(2) நேர்விற்கேற்ப, உரிமைத் தொகையை அல்லது உரிமக் கட்டணத்தை வசூலிப்பதற்கு அங்கீகரிக்கப்பட்ட ஒவ்வொரு அதிகாரியும், அறக்கட்டளையால் குறிப்பிடப்படும் வங்கிக் கணக்கிற்கு அறக்கட்டளை நிதிக்கான பங்களிப்பைச் செலுத்துமாறு குத்தகைதாரருக்கு அறிவுறுத்த வேண்டும்.

(3) நேர்விற்கேற்ப, உரிமைத் தொகையை அல்லது உரிமக் கட்டணத்தை வசூலிப்பதற்கு அங்கீகரிக்கப்பட்ட ஒவ்வொரு அதிகாரியும், குத்தகைதாரர் செலுத்த வேண்டிய மற்றும் அவரால் செலுத்தப்பட்ட தொகைக்கான பதிவேடு ஒன்றை வைத்துவர வேண்டும்:

இருப்பினும், 9–ஆம் விதியில் குறிப்பிடப்பட்டுள்ள தொகை நீங்கலாக ஏனைய யாதொரு தொகையும் முறையாகக் கணக்கு வைக்கப்பட்டு இது தொடர்பாக பதிவேடு ஒன்று அத்தகைய அலுவலர் வாயிலாக வைத்துவரப்பட வேண்டும்.

(4) அறக்கட்டளை நிதிக்குச் செலுத்தப்பட்ட அனைத்து தொகைகளின் மாதாந்திர ஒருங்கிணைந்த அறிக்கையை, மேற்படி அலுவலர், அறக்கட்டளைத் தலைவருக்கு அடுத்தடுத்த ஒவ்வொரு மாதமும் 15–ஆம் நாளுக்குள் அளிக்க வேண்டும்.

**11. வட்டி.–** மேற்சொன்ன சட்டத்தில் அல்லது அதன் கீழ் உருவாக்கப்பட்ட விதிகளில் என்ன சொல்லியிருப்பினும், அதனைக் கருத்தில் கொள்ளாது, குத்தகைதாரர் குறிப்பிட்ட காலத்திற்குள் செலுத்தத் தவறிய உரிமைத்தொகை அல்லது உரிமக் கட்டணம் சார்ந்த கூறுகளுக்கு மாவட்ட ஆட்சியர், ஆண்டுக்கு பன்னிரண்டு சதவீத தனி வட்டியை விதிக்கலாம்:

**12. அறக்கட்டளை நிதியின் செயல்பாடு.**

அறக்கட்டளை நிதி, யாதொரு தேசியமயமாக்கப்பட்ட வங்கியிலும் அறக்கட்டளையின் பெயரில் மட்டுமே வைப்பீடு செய்யப்படும், மேலும் அனைத்துக் கணக்குகளும் தலைவர் மற்றும் ஒருங்கிணைப்பாளரின் கூட்டுக் கையொப்பங்களின் கீழ் செயல்படுத்தப்படும். அறக்கட்டளை, நிதியின் கணக்குப் புத்தகங்களை வைத்துவரும்.

**13. அறக்கட்டளை நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும் மற்றும் அதன் செலவினம்.**

(1) அறக்கட்டளையில் உள்ள நிதி, அரசால் அவ்வப்போது வெளியிடப்படும் வழிகாட்டிக் குறிப்புகளுக்குட்பட்டு, அத்தகைய நோக்கத்திற்காக அறக்கட்டளையால் தயாரிக்கப்படும் வருடாந்திர திட்டத்தின்படி, மாவட்டத்தில் சுரங்கம் தொடர்பான நடவடிக்கைகளால் பாதிக்கப்படும் பகுதிகளைச் சேர்ந்த நபர்களின் நலன் மற்றும் நன்மைக்கான மற்றும் ஒட்டுமொத்த மேம்பாட்டிற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குப் பயன்படுத்தப்படும்;

(2) இது மாநில அரசு மற்றும் மத்திய அரசின் தற்போதைய திட்டங்கள் அல்லது திட்டப்பணிகளை முழுமையாக்கும் வகையிலும், சுரங்கங்கள் அமைந்துள்ள மாவட்டங்களில் சுரங்க நடவடிக்கைகளின் போதும் அதற்குப் பின்னரும் மக்களின் சுற்றுச்சூழல், சுகாதாரம் மற்றும் சமூக–பொருளாதாரத்தில் ஏற்படும் பாதகமான தாக்கங்களைக் குறைக்கும் அல்லது தணிக்கும் வகையிலும், துணை விதிகள் (3) மற்றும் (4)–இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறாக சுரங்கம் அமைந்துள்ள பகுதிகளில் பாதிக்கப்படும் மக்களுக்கு நீண்டகால நீடித்த மற்றும் நிலையான வாழ்வாதாரத்தை உறுதி செய்யும் வகையிலும், சுரங்கம் தொடர்பான நடவடிக்கைகளால் பாதிக்கப்படும் மக்களின் சமூக மற்றும் உள்கட்டமைப்பு தேவைகளை நிறைவு செய்வதற்கான வளர்ச்சிப் பணிகள் மற்றும் நலத்திட்டப்பணிகள் அல்லது திட்டங்களுக்கு இந்த நிதி பயன்படுத்தப்படலாம்.

(3) அறக்கட்டளை நிதியில் எழுபது விழுக்காடேனும் நேரடியாகப் பாதிக்கப்படும் பகுதியில் மட்டுமே செலவிடப்பட வேண்டும்.

(4) அறக்கட்டளை நிதியில் எழுபது விழுக்காட்டிற்கும் குறையாமல் பின்வரும் உயர் முன்னுரிமைப் பிரிவுகளுக்குப் பயன்படுத்தப்பட வேண்டும்:–

**(அ) குடிநீர் வழங்கல்:** மையப்படுத்தப்பட்ட சுத்திகரிப்பு அமைப்புகள், குடிநீர் சுத்திகரிப்பு நிலையங்கள், குடிநீருக்கான தனி நிலை வசதிகள் உட்பட நிரந்தர அல்லது தற்காலிக நீர் வழங்கல் தொடரமைப்பு, தொடர் குழாய்க் குடிநீர் வழங்கல் அமைப்பை அமைத்தல்;

**(ஆ) சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் மாசுக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள்:** கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள், அப்பகுதியிலுள்ள நீரோடைகள், ஏரிகள், குளங்கள், நிலத்தடி நீர் மற்றும் ஏனைய நீர் வளங்கள் மாசுபடுவதைத் தடுத்தல், சுரங்க நடவடிக்கைகள் மற்றும் குப்பைக் குவியல்களால் ஏற்படும் காற்று மற்றும் தூசி மாசுபாட்டைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள், சுரங்க வடிகால் அமைப்பு, சுரங்க மாசுத் தடுப்புத் தொழில்நுட்பங்கள் மற்றும் செயல்நிலையிலுள்ள அல்லது கைவிடப்பட்ட சுரங்கங்களுக்கான நடவடிக்கைகள், சுற்றுச்சூழலுக்கு உகந்த மற்றும் நீடித்த மற்றும் நிலையான சுரங்க மேம்பாட்டிற்குத் தேவையான ஏனைய காற்று, நீர் மற்றும் நில மாசுக் கட்டுப்பாட்டு ஏற்பாட்டு முறைகள், புகழ்பெற்ற கல்வி நிறுவனங்கள் அல்லது ஆராய்ச்சி நிறுவனங்களை ஈடுபடுத்தி குறிப்பிட்ட கனிமம் தொடர்பான மாசுபடுத்திகளை மற்றும் அவற்றின் இடர் திறனை அடையாளங் காணுதல், இடர்களை அடையாளங்காணுதல், காற்று தரக் கண்காணிப்புக் கருவிகளையும் மற்றும் காட்சித்திரைகளையும் அமைத்தல் மற்றும் ஆராய்ச்சியின் பரிந்துரைகளைச் செயல்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

**(இ) மருத்துவ வசதி:** பாதிக்கப்பட்ட பகுதிகளில் ஆரம்ப அல்லது இரண்டாம் நிலை மருத்துவ வசதிகளை உருவாக்குதல்; மருத்துவ உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல், இத்தகைய வசதிகளை திறம்பட செயல்படுத்துவதற்கு தேவையான மருத்துவர்கள், துணை மருத்துவப் பணியாளர்கள் அல்லது உதவிப் பணியாளர்கள் போன்ற தேவையான பணியாளர்களை நியமித்தல், தேவையான உபகரணங்கள் மற்றும் மருத்துவப் பொருட்களை வழங்குதல். மேலும் உள்ளாட்சி அமைப்புகள், மாநில அரசு மற்றும் இந்திய அரசு ஆகியவற்றின் தற்போதைய மருத்துவ உட்கட்டமைப்புகளுடன் இணைந்து பணியாற்றுவதுடன் அவற்றிற்குத் துணைபுரிதல், சுரங்கத்தில் பணிபுரிவதால் ஏற்படும் உடல் நலக் குறைபாடுகள் மற்றும் நோய்களைக் கவனிப்பதற்கெனத் தேவைப்படும் சிறப்பு உட்கட்டமைப்பை வடிவமைக்க 'தேசிய சுரங்கத் தொழிலாளர் சுகாதார நிறுவனம்' வழங்கும் (National Institute of Miners' Health) நிபுணத்துவத்தைப் பெறுதல், சுரங்கத் தொழிலால் பாதிக்கப்பட்ட நபர்களுக்காக நடமாடும் மருத்துவ சேவை குழுக்களை அமைத்தல் மற்றும் சுரங்கத் தொழிலால் பாதிக்கப்பட்ட நபர்களுக்காக குழு காப்பீட்டுத் மருத்துவத் திட்டத்தை நடைமுறைப்படுத்துதல்;

**(ஈ) கல்வி:** பள்ளி அல்லது கல்லூரி அல்லது தொழிற்பயிற்சி நிறுவனக் கட்டடங்கள், கூடுதல் வகுப்பறைகள், ஆய்வகங்கள், நூலகங்கள், கலை மற்றும் கைவினை பயிற்சி அறைகள், கழிப்பறைகள், குடிநீர் வசதிகள், குடியிருப்புப் பள்ளிகள், பாதிக்கப்பட்ட பகுதிகளின் மாணவர்கள் மற்றும் தொலைதூரப் பகுதி ஆசிரியர்களுக்கான குடியிருப்பு விடுதிகளைக் கட்டுதல், விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகள், ஆசிரியர்கள் அல்லது ஏனைய உதவிப் பணியாளர்களை ஈடுபடுத்துதல், இணைய வழி கற்றல் வசதி, பேருந்து அல்லது வேன் அல்லது மிதிவண்டிகள் அல்லது ரிக்ஷா வண்டிகள் அல்லது ஏனைய யாதொரு போக்குவரத்து வசதிகளுக்கு ஏற்பாடு செய்தல் மற்றும் ஊட்டச்சத்து தொடர்பான திட்டங்களைச் செயல்படுத்துதல் மற்றும் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள மாணவர்கள் அரசு அல்லது அரசு உதவி பெறும் பள்ளிகளில் உயர்கல்வியைத் தொடருவதற்கு நிதியுதவி வழங்குதல்;

**(உ) பெண்கள் மற்றும் குழந்தைகள் நலன்:** தாய்–சேய் நலம், ஊட்டச்சத்துக் குறைபாடு, தொற்று நோய்கள் அல்லது பாதிக்கப்பட்ட பகுதிகளில் எதிர்கொள்ளப்படும் ஏனைய யாதொரு பிரச்சனைகளுக்குத் தீர்வு காண்பதற்கான சிறப்புத் திட்டங்கள்;

**(ஊ) முதியோர் மற்றும் மாற்றுத் திறனாளிகள் நலன்:** முதியோர் மற்றும் மாற்றுத்திறனாளிகளின் நலனுக்கான சிறப்புத் திட்டம், மருத்துவ வசதி மற்றும் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் மறுவாழ்வு மையங்களுக்கு நிதியுதவி வழங்குதல்;

**(எ) திறன் மேம்பாடு மற்றும் வாழ்வாதாரத்தை உருவாக்குதல் :** வாழ்வாதார மேம்பாட்டிற்கான திறன் மேம்பாடு, தகுதியுள்ள உள்ளூர் நபர்களுக்கான வருமானத்தை ஏற்படுத்தும் வழிகளை உருவாக்குதல் மற்றும் பொருளாதார நடவடிக்கைகள், பயிற்சிக்கான திட்டப்பணிகள் அல்லது திட்டங்கள், பயிற்சிக் உபகரணங்கள், திறன் மேம்பாட்டு மையம் மற்றும் புத்தாக்க தொழில் முனைவு மேம்பாட்டு மையம் அமைத்தல், சுயவேலைவாய்ப்புத் திட்டங்கள், சுயஉதவிக் குழுக்களுக்கு உதவுதல், அத்தகைய சுயவேலைவாய்ப்பு பொருளாதார நடவடிக்கைகளுக்குத் தேவையான மூலப் பொருள், உற்பத்தி முதல்

சந்தைப் படுத்துவதற்கான அனைத்து வசதிகளை வழங்குதல், பாதிக்கப்பட்ட மக்கள் மற்றும் பகுதிகளின் கலை மற்றும் கைவினைப் பொருட்களை ஊக்குவிப்பதற்கும் காட்சிப்படுத்துவதற்குமான பணிகளை மேற்கொள்ளுதல் மற்றும் சிறு வன மகசூல் பொருட்களைச் சேகரித்தல் மற்றும் பதப்படுத்துதல்;

**(ஏ)** **துப்புரவு:** கழிவுகளைச் சேகரித்தல், எடுத்துச் செல்லுதல் மற்றும் அகற்றுதல், பொது இடங்களைச் சுத்தம் செய்தல், முறையான வடிகால் மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல், மலக் கழிவை அகற்றுவதற்கான வசதி ஏற்படுத்துதல், கழிப்பறை வசதிகள் மற்றும் ஏனைய தொடர்புடைய நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்;

**(ஐ)** **வீட்டு வசதி :** சுரங்கத் தொழிலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இந்திய அரசு அல்லது மாநில அரசின் யாதொரு திட்டங்களின் கீழ் வராத கான்கீரிட் (pucca) வீடுகள் அமைத்துக் கொடுத்தல்;

**(ஒ)** **வேளாண்மை:** வேளாண்மை, தோட்டக்கலை மற்றும் பண்ணைக் காடு வளர்ப்பு தொடர்பான நடவடிக்கைகள், பயிற்சி வழங்குதல் வாயிலாக விவசாயிகளுக்கு உதவுதல், உழவர் உற்பத்தியாளர் அமைப்புகள் அல்லது கூட்டமைப்புகள் அல்லது கூட்டுறவு சங்கங்களுக்கு உதவுதல், உணவுப் பதப்படுத்தும் பிரிவுகளை நிறுவுதல், குளிர்பதனக் கிடங்கு உள்ளிட்ட கிடங்கு வசதிகள், சந்தை வளாகங்கள் போன்ற சந்தைப்படுத்தல் வசதிகளை ஏற்படுத்துதல், மூலிகை செடிகளை வளர்த்தல் மற்றும் பதப்படுத்துதல்;

**(ஓ)** **கால்நடை வளர்ப்பு:** கால்நடை வளர்ப்பு, கோழி வளர்ப்பு, பன்றி வளர்ப்பு, மீன் வளர்ப்பு, தீவனம் மற்றும் தீவன உற்பத்தி ஆகியவற்றை ஊக்குவித்தல், கால்நடை வளர்ப்பில் நவீன தொழில்நுட்பத்தை ஊக்குவித்தல், உழவர் உற்பத்தியாளர் அமைப்புகள், சுயஉதவிக் குழுக்கள் மற்றும் உழவர் கூட்டுறவு அமைப்புகளுக்கு உதவுதல்;

(5) பின்வரும் ஏனைய முன்னுரிமைத் திட்டங்களுக்கு அறக்கட்டளை நிதியிலிருந்து முப்பது விழுக்காட்டிற்கு மிகாத அளவு தொகை பயன்படுத்தப்பட வேண்டும்:—

**(a)** **அடிப்படை உட்கட்டமைப்பு வசதி :** சாலைகள், பாலங்கள், இருப்பு பாதை மற்றும் நீர்வழித் திட்டங்கள் போன்ற தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல்.

**(b)** **நீர்ப்பாசனம்:** தடுப்பணைகள் மற்றும் நீர்திசைமாற்றும் தடுப்பணைகள் உள்ளிட்ட மாற்று நீர்ப்பாசன ஆதாரங்களை உருவாக்குதல், பொருத்தமான மற்றும் மேம்பட்ட நீர்ப்பாசன தொழில்நுட்பங்களைப் பின்பற்றுதல், சொட்டு நீர்ப்பாசனம் உள்ளிட்ட நுண் நீர்ப்பாசன வசதிகளுக்கு உதவுதல் மற்றும் ஆழ்துளை கிணறுகள் மற்றும் மின் மோட்டார்களுக்கு மின்னிணைப்பு வழங்க உதவுதல்.

**(c)** **ஆற்றல் மற்றும் நீர்வரத்து பகுதி மேம்பாடு:** நுண் நீர் மின்சாரம், பரவலாக்கப்பட்ட சூரிய சக்தி அல்லது ஏனைய புதுப்பிக்கத்தக்க ஆற்றல் ஆதாரங்கள் போன்ற மாற்று ஆற்றல் ஆதாரங்களை மேம்படுத்துதல் மற்றும் மழைநீர் சேகரிப்பு அமைப்பு ஏற்படுத்தல். பழத்தோட்டங்கள், ஒருங்கிணைந்த விவசாயம் மற்றும் பண்ணைக்காடு வளர்ப்பு மற்றும் நீர்பிடிப்புப் பகுதிகளைச் மீட்டெடுத்தல்.

(d) சுரங்கத் தொழிலால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் சுற்றுச்சூழலின் தரத்தை மேம்படுத்துவதற்கான ஏனைய யாதொரு நடவடிக்கைகள்.

இருப்பினும், ஆண்டு வரவினத்திலிருந்து ஐந்து விழுக்காட்டிற்கு மிகாதத் தொகை, அந்த நிறுவனத்தின் நிருவாக, மேற்பார்வை மற்றும் அலுவலகச் செலவுகள் அல்லது பணியமைப்புச் செலவுகளுக்காகப் பயன்படுத்தப்படலாம்:

இருப்பினும், இந்த முதல் வரம்பு நிபந்தனையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, அறக்கட்டளைக்கு நிருவாக மற்றும் தொழில்நுட்ப வசதிகளை வழங்குவதற்காக அரசுத் துறைகளிலிருந்து அல்லது மாவட்ட ஊராட்சியின் நிரந்தரப் பணியாளர்கள் அல்லது அரசால் முடிவு செய்யப்படும் ஏனைய யாதொரு பணி நிலைப்பிரிவிலிருந்து நியமிக்கப்படும் பணியாளர்களின் பணிகளுக்காக, அறக்கட்டளையின் திரட்டப்பட்ட நிதியிலிருந்து, ஐந்து விழுக்காட்டிற்கு மிகாமல் ஒதுக்கப்பட்ட தொகையிலிருந்து மூன்று விழுக்காடு வரையிலான தொகையை செலவு செய்யலாம்.

(6) துணை விதிகள் (4) மற்றும் (5)—இல் என்ன சொல்லியிருப்பினும் அதனை கருத்தில் கொள்ளாமல், அறக்கட்டளை நிதி அல்லது அதன் யாதொரு பகுதி நிதியும், அதில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களைத் தவிர, யாதொரு நேர்விலும், யாதொரு பயனாளிகளுக்கு கடன் முன்பணமாகவோ அல்லது மானியாக வழங்கப்படக் கூடாது.

**14.** **பொது நிபந்தனைகள்.— (1)** இந்த விதிகளின் கீழ் மேற்கொள்ளப்பட வேண்டிய மேம்பாடு மற்றும் நலத்திட்ட நடவடிக்கைகள், இயன்ற வரையில், மாநில அரசு மற்றும் இந்திய அரசால் நிதியளிக்கப்படும் தற்போதைய திட்டங்கள் அல்லது திட்டப்பணிகளுக்குத் துணைபுரியும் வகையில் இருத்தல் வேண்டும். இருப்பினும், அறக்கட்டளையின் அதிகாரங்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாதவாறு, மாநிலத் திட்டங்கள் மற்றும் மாவட்டத் திட்டங்களுடன் ஒருங்கிணைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அதன் மூலம், அறக்கட்டளை மேற்கொள்ளும் செயல்பாடுகள், வளர்ச்சி மற்றும் நலத்திட்ட நடவடிக்கைகளுக்கு துணைபுரியும் வகையில் அமைவதுடன், மாநிலத் திட்டத்திற்கான கூடுதல் வரவு செலவு திட்ட ஆதாரமாக கருதப்படும்.

இருப்பினும், 'மாசுபடுத்தும் நிறுவனமே அதற்கான செலவை ஏற்க வேண்டும்' (polluter pays principle) என்ற கொள்கையின் கீழ் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள், அறக்கட்டளை நிதியைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படக் கூடாது.

(2) ஒரு மாவட்டத்தில் உள்ள சுரங்கம் அல்லது குவாரியினால் பாதிக்கப்பட்ட பகுதி மற்றொரு மாவட்டத்தின் அதிகார வரம்பெல்லைக்குள் அமைந்திருந்தால், அந்தச் சுரங்கம் அல்லது குவாரியிடமிருந்து அறக்கட்டளையினால் வசூலிக்கப்பட்டத் தொகையில், பாதிப்புக்குள்ளான பரப்பளவிற்கு ஏற்ப விகிதாச்சாரப்படி கணக்கிடப்பட்ட தொகை, சம்பந்தப்பட்ட மற்ற மாவட்டத்தின் அறக்கட்டளைக்கு மாற்றப்பட வேண்டும். மேலும் அத்தொகை அத்தகைய பகுதிகளின் திட்டப் பணிகளைச் செயல்படுத்துவதற்கு மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும்:

இருப்பினும், அரசிடம் முன் ஒப்புதல் பெறப்பட வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு நிதியை அவ்வாறு மாற்றம் செய்ய வேண்டும் என்பதுடன் திட்டப் பணிகளையும் செயல்படுத்த வேண்டும்.

(3) ஆண்டுதோறும் பத்து கோடி ரூபாய் அல்லது அதற்கு மேல் நிதி வசூலிக்கும் மாவட்டங்கள், நீடித்த நிலையான வாழ்வாதாரத்தை வழங்குவதற்காக ஆண்டு வரவினங்களில் பத்து விழுக்காட்டிற்கு மிகாத நியமானத் தொகையைக் கொண்டு அறக்கட்டளை நிதியை பராமரித்து வர வேண்டும்.

(4) அத்தகைய அறக்கட்டளை நிதி அனைத்தும் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் காலவரை வைப்புத் தொகையாக அல்லது அரசுப் பிணைகளில் அல்லது பிணை முறிகளில் அல்லது அரசால் அனுமதிக்கப்பட்ட ஏனைய ஆவணங்களில் முதலீடு செய்யப்படலாம்.

(5) தாதுக்கள் தீர்ந்துபோனது உட்பட ஏதேனும் காரணத்தினால் சுரங்கப் பணிகள் நிறுத்தப்பட்ட பகுதிகளில் வாழ்வாதாரங்களை உருவாக்குவதற்கும் நீடித்து நிலைப்பதற்கும் இந்த அறக்கட்டளை நிதி பயன்படுத்தப்பட வேண்டும்.

(6) அறக்கட்டளை நிதி, எந்த வகையிலும், மாநில அரசு கருவூலத்திற்கு அல்லது மாநில அளவிலான நிதிக்கு, அவை எந்த பெயரில் அழைக்கப்பட்டாலும், அல்லது முதலமைச்சரின் நிவாரண நிதிக்கு அல்லது வேறு எந்த நிதிக்கு அல்லது திட்டங்களுக்கு மாற்றப்படக் கூடாது.

(7) அறக்கட்டளையின் நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும் எந்தவொரு செலவினத்திற்கும், மாநில அளவில் அரசால் அல்லது மாநில அளவிலான எந்தவொரு முகமையால் ஒப்புதல் அல்லது அனுமதி வழங்கப்படக் கூடாது.

(8) ஒரு மாவட்டத்திற்குள், நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பாதிக்கப்பட்டப் பகுதிகளுக்கு வெளியில் அல்லது விதி 2(c)–இல் வரையறுக்கப்பட்டுள்ளவாறு, பாதிக்கப்பட்ட மக்கள் அல்லாத ஏனையவருக்கு எந்த நிதியும் செலவிடப்படக் கூடாது.

(9) இந்த விதியின் துணை விதி (2)–இல் குறிப்பிட்டுள்ளவைகள் தவிர, எந்த நிதியும் ஒரு மாவட்டத்திலிருந்து மற்றொரு மாவட்டத்திற்கு எந்த வகையிலும் மாற்றப்படக் கூடாது.

**15. தொலைநோக்குத் திட்டம் மற்றும் ஆண்டுத் திட்டம்.– (1)**

அறக்கட்டளையினால் மேற்கொள்ளப்படக் கருதப்பட்டுள்ள நீண்டகாலத் திட்டங்கள் மற்றும் குறுகிய காலத் திட்டங்களுக்கானத் திட்ட அறிக்கைகளைத் அடுத்தடுத்த ஒவ்வொரு ஐந்து ஆண்டுகளுக்கும் மற்றும் அந்த ஐந்தாண்டு காலத்திற்குள் ஒவ்வொரு நிதியாண்டிற்கும் அறக்கட்டளையின் நிருவாகக் குழுவின் ஒருங்கிணைப்பாளர் தயாரிப்பதை உறுதி செய்ய வேண்டும். இவை முறையே தொலைநோக்குத் திட்டம் மற்றும் ஆண்டுத் திட்டம் எனக் குறிப்பிடப்படும். அத்துடன் அத்தகைய காலக்கட்டத்தில் அறக்கட்டளையினால் மேற்கொள்ளப்பட வேண்டிய அல்லது முடிக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள், திட்டங்களை முடிப்பதற்கான எதிர்பார்க்கப்படும் கால அளவு மற்றும் அத்தகைய திட்டங்களுக்கான செலவு குறித்த விவரங்களையும் தயார் செய்ய வேண்டும்.

(2) தொலைநோக்குத் திட்டத்தை வடிவமைப்பதற்காகப் பல்கலைக்கழகங்கள் அல்லது புகழ் வாய்ந்த அமைப்புகள் அல்லது முகமைகள் வாயிலாக அறக்கட்டளை ஒரு அடிப்படை ஆய்வை நடத்த வேண்டும்:

ஆனால், அத்தகைய அடிப்படை ஆய்வை நடத்தும்போது, பல்கலைக்கழகங்கள் அல்லது புகழ் வாய்ந்த நிறுவனங்கள் அல்லது முகமைகள், சுரங்கம் தொடர்பான செயல்பாடுகளால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் கூட்டங்களை நடத்துவதன் வாயிலாகவோ மற்றும்/ அல்லது அறக்கட்டளை மற்றும்/அல்லது மாவட்ட நிருவாகத்தின் அதிகாரப்பூர்வ வலைதளத்தில் அறிவிப்பை வெளியிடுவதன் வாயிலாகவோ, அறக்கட்டளையின் தொலைநோக்குத் திட்டத்தில் சேர்க்கப்பட வேண்டிய திட்டப்பணிகள் அல்லது நடவடிக்கைகள் குறித்த ஆலோசனைகள் அல்லது விண்ணப்பங்களைப் பெற பொதுமக்கள், ஊராட்சிகள், அரசு சாரா நிறுவனங்கள், சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் போன்ற பொறுப்பாளர்களுடன் கலந்தாலோசிக்க வேண்டும்:

இருப்பினும், அந்த அறிவிப்பின் நகல் ஒன்று மாவட்டத்திலுள்ள அனைத்து உள்ளாட்சி அமைப்புகள் அல்லது கிராம நிருவாக அலுவலகங்களுக்கு ஆலோசனைகளை வழங்க கோரி அனுப்பப்பட வேண்டும், இதன் மூலம் உள்ளாட்சி அமைப்புகள் மற்றும்/அல்லது கிராம சபை உள்ளூர் பொதுமக்களின் தேவைகளைக் கண்டறிய உதவலாம்:

மேலும், பொறுப்பாளர்களிடமிருந்து பெறப்பட்ட விண்ணப்பங்கள் அல்லது ஆலோசனைகள் அவற்றின் தகுதி மற்றும் முன்னுரிமை நிலையின் அடிப்படையில் கூர்ந்தாய்வு செய்யப்பட வேண்டியதுடன், தகுதியுள்ளவை முன்னுரிமையின்படி அடிப்படை ஆய்வு அறிக்கையில் சேர்க்கப்பட வேண்டும்.

மேலும், தொலைநோக்குத் திட்டத்தை வடிவமைக்க ஏதேனும் ஒரு துறையினால் மேற்கொள்ளப்பட்ட அடிப்படை ஆய்வு அறிக்கை அல்லது மதிப்பீடு கிடைக்குமாயின், அதையும் அறக்கட்டளை பயன்படுத்திக்கொள்ளலாம். அந்த ஆய்வுகளின் குறிப்புகள் மற்றும் முக்கிய முடிவுகள் தொலைநோக்குத் திட்டங்களில் சேர்க்கப்பட வேண்டும்.

(3) அடிப்படை ஆய்வு முடிவுற்றதும், அந்த ஆய்வின் வாயிலாகக் கண்டறியப்பட்ட முடிவுகள் மற்றும் அவற்றில் உள்ள குறைப்பாடுகளை களையக் கூடிய வகையில் அல்லது ஏதேனும் ஒரு துறையினால் மேற்கொள்ளப்பட்ட அது போன்ற ஆய்வு அல்லது மதிப்பீட்டின் அடிப்படையில் அறக்கட்டளை ஐந்து ஆண்டுகளுக்கான ஒரு உத்தியைத் தயாரித்து அவை தொலைநோக்குத் திட்டத்தில் சேர்க்கப்பட வேண்டும்.

(4) தற்போதுள்ள இருப்புத் தொகை மற்றும் ஐந்து ஆண்டு காலத்தில் அறக்கட்டளை நிதிக்கு வந்து சேர வேண்டிய தொகை ஆகியவற்றைக் கணக்கில் கொண்டு தொலைநோக்குத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும்.

(5) ஐந்தாண்டு தொலைநோக்குத் திட்டம், ஆண்டு வாரியான செயல் திட்டத்தைக் கொண்டிருக்க வேண்டும்.

(6) ஐந்தாண்டு தொலைநோக்குத் திட்டம், விதி 13—இல் வகை செய்யப்பட்டுள்ளவாறாக, அனைத்து முன்னுரிமைத் துறைகள் குறித்தும் தனித்தனிப் பிரிவுகளைக் கொண்டிருக்க வேண்டும்.

(7) ஐந்தாண்டு தொலைநோக்குத் திட்டத்திற்கு அறக்கட்டளையின் ஆளுகைக் குழுவினால் ஒப்புதல் அளிக்கப்பட வேண்டும். மேலும் ஒப்புதல் அளிக்கப்பட்ட தொலைநோக்குத் திட்டம் அறக்கட்டளை மற்றும் மாவட்ட நிருவாகத்தின் அதிகாரப்பூர்வ வலைதளத்தில் காட்சிப்படுத்தப்பட வேண்டும்.

(8) ஒவ்வொரு நிதியாண்டிலும், நிருவாகக் குழுவானது, தொலைநோக்குத் திட்டத்தில் வழங்கப்பட்டுள்ள ஆண்டு வாரியான செயல் திட்டம் மற்றும் முந்தைய ஆண்டுகளில் அதன் இலக்குகளை நிறைவேற்றுவதில் எய்தப்பட்ட இலக்குகளின் அடிப்படையில், அறக்கட்டளையின் நோக்கங்களை அடைவதற்காக மேற்கொள்ளப்படுவதற்கு கருதப்பட்ட அனைத்துத் திட்டப் பணிகள், திட்டங்கள், நடவடிக்கைகள் அடங்கிய ஆண்டு திட்டத்தைத் தயாரிக்க வேண்டும். இத்திட்டம் தெளிவாக வரையறுக்கப்பட்ட இலக்குகளுடன் இருக்க வேண்டும். மேலும் அந்த ஆண்டின் ஏப்ரல் 1—ஆம் நாளுக்கு முன்னதாக அறக்கட்டளையின் ஆட்சி மன்றக் குழுவின் ஒப்புதலைப் பெற வேண்டும்.

(9) இவ்விதியில் என்ன சொல்லியிருப்பினும் அதனை கருதிப்பார்க்காமல், சுரங்கம் தொடர்பான செயல்பாடுகளால் பாதிக்கப்பட்ட மக்கள் மற்றும் அப்பகுதியின் நலன் மற்றும் நன்மை கருதி, ஆளுகைக் குழு ஏற்பளிக்கப்பட்ட தொலைநோக்குத் திட்டத்தில் சேர்க்கப்படாமலிருந்தாலும், அவசரத் தன்மையுடையதாகக் கருதப்படும் வேறு சில பணிகள் மற்றும் செலவினங்களுக்கு விதி 16—க்கு உட்பட்டு ஆண்டுத் திட்டத்தின் பத்து விழுக்காடு உச்சவரம்பிற்கு மிகாமல் இருக்கும் வகையில் அவற்றிற்கு ஆளுகைக் குழு ஒப்புதல் அளித்து, செயல்படுத்தலாம்.

**16. ஆண்டு வரவு—செலவுத் திட்டம்.** ஒவ்வொரு நிதியாண்டின் தொடக்கத்திலும், நிருவாகக் குழுவின் ஒருங்கிணைப்பாளர், கையிருப்பில் உள்ள நிதி, முந்தைய நிதியாண்டில் திட்டங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி, இந்த நிதியாண்டிற்கான நிருவாக, சட்டரீதியான மற்றும் பிற செலவினங்கள் உட்பட ஆண்டு திட்டத்தில் உள்ள செயல்பாடுகள் தொடர்பாக கருதப்பட்டுள்ள வரவு மற்றும் செலவின விவரங்களுடன் சேர்த்து, இது தொடர்பாகத் தேவைப்படும் நிதி குறித்த விவரங்களையும் உள்ளடக்கிய ஆண்டு வரவு—செலவுத் திட்டத்தினை தயாரித்து ஆளுகைக் குழுவின் ஒப்புதலுக்காக அளிக்க வேண்டும்.

**17. ஆண்டுத் திட்டம் மற்றும் ஆண்டு வரவு—செலவுத் திட்டத்திற்கான ஒப்புதல்.—** (1) ஆண்டுத் திட்டம் மற்றும் ஆண்டு வரவு—செலவுத் திட்டம் ஆகியவை ஒப்புதலுக்காக ஆளுகைக் குழுவின் முன்பு வைக்கப்படுதல் வேண்டும்.

(2) ஆளுகைக் குழுவின் தலைவரிடமிருந்து, முறையாக ஒப்புதல் அளிக்கப்பட்ட ஆண்டுத் திட்டம் மற்றும் அது தொடர்பான ஆண்டு வரவு—செலவுத் திட்டத்தின் நகல்களை நிருவாகக் குழுவின் ஒருங்கிணைப்பாளர் பெற்றவுடன், அதனை ஆளுகைக் குழுவின் ஒப்புதல் பெறப்பட்ட நாளிலிருந்து முப்பது நாட்களுக்குள் அரசிடம் அளிக்க வேண்டும்.

(3) துணை விதி (2)—இன் விதித்துறைகளுக்கு பாதகமின்றி, ஆளுகைக் குழுத் தலைவரின் சிறப்பு ஒப்புதலுக்கு உட்பட்டு, சுரங்கம் தொடர்பான செயல்பாடுகளால் பாதிக்கப்பட்ட மக்கள் மற்றும் பகுதியின் நலன் மற்றும் நன்மைக்காக, ஆண்டுத் திட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்படாத ஆனால், புயல், வெள்ளம், வறட்சி மற்றும் பெருந்தொற்றுப் பரவல் போன்ற இயற்கைப் பேரிடர்களால் ஏற்படும் பாதிப்புகளைத் தடுக்க அல்லது தணிக்க அல்லது நிருவகிக்க உடனடி நடவடிக்கை தேவைப்படும் பணிகளுக்கான செலவினங்களை அறக்கட்டளை மேற்கொள்ள வேண்டும். எடுக்கப்பட வேண்டும். இருப்பினும், அதற்கு அடுத்து நடைபெறும் கூட்டத்தில் பின்னேற்பு ஆணை வேண்டி இது ஆளுகைக் குழுவின் முன்பு வைக்கப்பட வேண்டும்.

(4) அறக்கட்டளையானது, ஒப்புதல் அளிக்கப்பட்ட ஆண்டுத் திட்டம் மற்றும் ஆண்டு வரவு—செலவுத் திட்டத்தை, மாவட்ட ஊராட்சி, மாவட்ட நிருவாகம் மற்றும் அரசு ஆகியவற்றிற்குரிய இணையதளங்களில் வெளியிடுவதற்காக அவர்களுக்கு அனுப்ப வேண்டும்.

**18. பணியைச் செயல்படுத்துதல். (1)**

1) அறக்கட்டளையால் மேற்கொள்ளப்படும் செயல்பாடுகள், அரசுத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்குப் பொருந்தக்கூடிய வகையில், அத்தகைய பணிகளை குறிப்பிட்ட விதிமுறைகள் மற்றும் கொள்முதல் நடைமுறைகளைக் கொண்ட, அவற்றை செயல்படுத்துவதற்கான அரசுத் துறைகள், முகமைகள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்கள் வாயிலாக செயல்படுத்தப்பட வேண்டும்.

(2) துணை விதி (1)—இல் என்ன சொல்லியிருப்பினும் அதனை கருதிப்பார்க்காமல், அரசுத் துறைகள், முகமைகள் மற்றும் பொதுத் துறை நிறுவனங்கள் வாயிலாக செயல்படுத்த இயலாதப் பணிகளை, ஆளுகைக் குழுவின் ஒப்புதலுடன், 1998—ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 43/1998) மற்றும் 2000—ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் விதிகளைப் பின்பற்றி, அப்பணியைச் செயல்படுத்துவதில் தகுதியும் திறனும் வாய்ந்த ஏனைய முகமைகளிடம் நிருவாகக் குழு வழங்க வேண்டும். அத்தகைய அனைத்து நேர்வுகளிலும், அரசுத் துறைகள், முகமைகள் மற்றும் பொதுத் துறை நிறுவனங்கள் வாயிலாக பணிகள் செயல்படுத்தப்படும் போது, அரசுத் திட்டங்களுக்குப் பின்பற்றப்பட வேண்டிய அனைத்து விதிமுறைகள், நிபந்தனைகள் மற்றும் நடைமுறைகள் பின்பற்றப்பட வேண்டும்.

(3) இப்பணியின் தொழில்நுட்ப ஒப்புதல் மற்றும் மேற்பார்வை சம்பந்தப்பட்ட துறைக்குப் பொருந்தக்கூடிய நிருவாக அதிகாரப் பகிர்வு விதிகளின் கீழ் தகுதியுள்ள அலுவலர்களால், மேற்கொள்ளப்படும்.

(4) பொருட்களைக் கொள்முதல் செய்வதற்கு, உரிய நடைமுறைகளைப் பின்பற்றி செயற்படுத்தும் முகமைகள், தமிழ்நாடு மின்னணு கொள்முதல் அமைப்பு அல்லது இந்திய அரசின் அரசு மின்னணு சந்தை (GeM) வலைவாசலைப் பயன்படுத்தலாம்.

(5) பணியைச் செயல்படுத்தும் அனைத்து முகமைகள் மற்றும் பயனாளிகளுக்கான நிதிப் பரிமாற்றம், நேரடிப் பயன் பரிமாற்றம் வாயிலாக அவர்களின் வங்கிக் கணக்கில் மட்டுமே செலுத்தப்பட வேண்டும்.

**19. நிருவாக ஏற்பாடுகள்.—** (1) அறக்கட்டளையை நிருவகிப்பதற்கும், ஆண்டுத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கும், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பணிபுரியும் பணியாளர்கள் உட்படத் தனது கட்டுப்பாட்டில் உள்ள பணியாளர்களை தேவைக்கேற்ப அரசு வழங்கும்.

(2) மாவட்ட ஆட்சியர், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தின் நிரந்தரப் பணியாளர்கள் அல்லது அத்தகைய ஏனைய பணிநிலையில் உள்ளவர்களை அறக்கட்டளைக்கு நிருவாக மற்றும் தொழில்நுட்ப உதவிகளை வழங்கும் பொருட்டு, தேவைப்படும் எண்ணிக்கையிலான அடிப்படைப் பணியாளர்களாக பணியமர்த்த வேண்டும். அத்தகைய பணியாளர்கள் அவர்களுடைய பணிநிலைகளிலேயே தங்களது பணிகளைத் தொடருவர். 13—ஆம் விதியின் துணை விதி (7)—இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, அறக்கட்டளையின் நிருவாகச் செலவுகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள ஐந்து விழுக்காடு நிதியிலிருந்து இந்த நோக்கத்திற்கான செலவுகளை, அறக்கட்டளைக்குக் கிடைத்த திரட்டப்பட்ட நிதியில் மூன்று விழுக்காடு வரை அறக்கட்டளை ஏற்றுக் கொள்ளலாம்.

(3) மாநில அரசின் முன் அனுமதியின்றி, அறக்கட்டளையின் கீழ் தற்காலிக அல்லது நிரந்தரப் பணியிடங்கள் ஏதும் உருவாக்கப்படக் கூடாது.

(4) அறக்கட்டளையின் சீரான செயல்பாட்டிற்குத் தேவைப்படும் குறைந்தளவு பணியாளர்களை, சேவை வழங்குநர்கள் வாயிலாக பதினொரு மாத காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் அறக்கட்டளை பணியமர்த்திக் கொள்ளலாம். மேலும், அதன் செயல்பாட்டிற்கான தற்செயல் செலவினங்களை மேற்கொள்ள ஏற்பாடு செய்யலாம்.

(5) ஆண்டு நிதி வசூல் ஐம்பது கோடி ரூபாய்க்கு மேல் உள்ள அறக்கட்டளை, திட்டமிடல், தொழில்நுட்பம், கணக்கு மற்றும் கண்காணிப்பு ஆகியவற்றுக்காக திட்ட மேலாண்மை பிரிவு ஒன்றை அமைத்தல் வேண்டும், மேலும் அப்பிரிவுக்கான செலவினங்கள், நிருவாகச் செலவினங்களிலிருந்து மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

(6) தேவைப்படும் தகுதியுள்ள பணியாளர்களை திட்ட மேலாண்மைப் பிரிவு பதினொரு மாத காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் மட்டுமே பணியமர்த்த இயலும்.

(7) அரசின் முன் அனுமதி பெறாமல் யாதொரு வாகனங்களையும் அறக்கட்டளை வாங்க கூடாது.

**20. கணக்குகள் பராமரிப்பு மற்றும் தணிக்கை.—** (1) நிதியத்தின் கணக்குகள் மற்றும் தணிக்கை ஆகியவை பின்வரும் முறையில் இருத்தல் வேண்டும்:—

(a) அறக்கட்டளையின் நிதியாண்டு கணக்கு, ஏப்ரல் மாத 1 ஆம் நாள் முதல் அடுத்த ஆண்டின் மார்ச் மாதம் 31 ஆம் நாள் வரை இருக்க வேண்டும்.

(b) அரசால் நிர்ணயிக்கப்படும் படிவம், முறை மற்றும் வகையில், அறக்கட்டளை விவகாரங்களின் உண்மையான மற்றும் நியாயமான நிலையைத் தெரிவிக்கும் வகையில், அறக்கட்டளை நிதி தொடர்பான முறையான கணக்குப்புத்தகங்கள், ஆவணங்கள் மற்றும் பதிவேடுகளை ஒருங்கிணைப்பாளர் பராமரித்தல் வேண்டும் அல்லது பராமரிக்கச் செய்ய வேண்டும்.

(c) ஒவ்வொரு நிதியாண்டும் நிறைவுற்ற முப்பது நாட்களுக்குள், அறக்கட்டளையின் கணக்குகள் அறக்கட்டளையால் நியமிக்கப்பட்ட தகுதியுள்ள தணிக்கையாளர்(கள்) வாயிலாக தணிக்கை செய்யப்பட வேண்டும். தணிக்கையாளர்(கள்), ஆண்டுத் தணிக்கை அறிக்கையை நிருவாகக் குழுவிடம் அளிக்க வேண்டும். மேலும் நிருவாகக் குழு அதனைப் பெற்றவுடன், அது அளிக்கப்பட்ட நாளிலிருந்து அதிகப்படியாக முப்பது நாட்களுக்குள், அதன் மொத்த உறுப்பினர்களில் ஐம்பது விழுக்காட்டிற்கும் மேற்பட்டோரின் முன்னிலையில் ஒப்புதலுக்காக ஆளுகைக் குழுவின் முன் வைக்கப்பட வேண்டும்.

(2) ஆளுகைக் குழுவால் ஒப்புதல் அளிக்கப்பட்ட நாளிலிருந்து ஒரு மாதத்திற்குள், ஒப்புதல் அளிக்கப்பட்ட தணிக்கை அறிக்கையை அரசிடம் அறக்கட்டளை அளிப்பதோடு, அதன் இணையதளத்தில் அந்த அறிக்கையினை வெளியிட வேண்டும்.

(3) துணை விதி (1)—இல் என்ன சொல்லியிருப்பினும் அதனை கருதிப்பார்க்காமல், ஒவ்வொரு நிதியாண்டும் நிறைவுற்ற பின்னர் மாநிலக் கணக்காயர் (தணிக்கை) அறக்கட்டளையின் கணக்குகளை ஆண்டுதோறும் தணிக்கை செய்ய வேண்டும்.

**21. தணிக்கையாளர் (கள்) நியமனம்.—** (1) அறங்காவலர்களால் நிர்ணயிக்கப்படும் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் அடிப்படையில், அதிகப்படியாக மூன்று ஆண்டுகளுக்கு, ஆளுகைக்குழு கூட்டத்தில் அறக்கட்டளையின் கணக்குகளைத் தணிக்கை செய்யும் பொருட்டு தணிக்கையாளரை(களை) அறக்கட்டளை நியமிக்க வேண்டும்.

(2) அறக்கட்டளையின் கணக்குகளை தவறாகத் தணிக்கை செய்திருப்பது ஏதேனும் கண்டறியப்பட்டால், ஆளுகைக் குழுவின் மொத்த உறுப்பினர்களில் ஐம்பது விழுக்காட்டிற்கும் மேற்பட்டோரின் ஒப்புதலுடன் அறக்கட்டளையின் தணிக்கையாளர்(களை) நீக்குவது குறித்து ஆளுகைக் குழு, முடிவு செய்யலாம்.

**22. ஆண்டறிக்கை.—** (1) ஒவ்வொரு ஆண்டும், நிதியாண்டு நிறைவுற்ற நாளிலிருந்து இரண்டு மாதங்களுக்குள், சம்பந்தப்பட்ட நிதியாண்டின் செயல்பாடுகள் குறித்த ஆண்டறிக்கையைத் தயாரிக்க நிருவாகக் குழுவின் ஒருங்கிணைப்பாளர் நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும், நிருவாகக் குழு அந்த அறிக்கை அளிக்கப்பட்ட ஒரு மாதத்திற்குள் ஒப்புதலுக்காக ஆளுகைக் குழுவின் முன் வைக்க வேண்டும்.

(2) ஆளுகைக் குழுவால் ஒப்புதல் அளிக்கப்பட்ட நாளிலிருந்து ஒரு மாதத்திற்குள் ஆண்டறிக்கை அரசிடம் அளிக்கப்பட வேண்டும். மேலும், அது அறக்கட்டளையின் இணையதளத்திலும் வெளியிடப்பட வேண்டும்.

(3) ஒவ்வொரு அறக்கட்டளையின் ஆண்டறிக்கையும் மாநில சட்டமன்றப்பேரவை முன்னர் வைக்கப்பட வேண்டும்.

**23. வெளிப்படைத்தன்மையை பின்பற்றுதல்,–** (1) ஒவ்வொரு அறக்கட்டளையும் ஒரு வலைத்தளத்தை உருவாக்கி வைத்துவர வேண்டும் அல்லது மாநில அரசால் இந்த நோக்கத்திற்காக உருவாக்கப்படக்கூடிய பொது வலைதளத்தில் இணைத்துக் கொள்ளலாம். இந்த வலைதளத்தில், ஏனையவற்றுக்கிடையே பின்வரும் தகவல்கள் பதிவேற்றம் செய்யப்பட்டு நாளதுவரையாக்கப்பட வேண்டும், அவையாவன:–

(i) அறக்கட்டளையின் அமைப்புகளுடைய உட்கூறுகள் குறித்த விவரங்கள்

(ii) சுரங்கத் தொழிலால் பாதிக்கப்படுகிற பகுதிகள் மற்றும் மக்களின் பட்டியல்;

(iii) குத்தகைதாரர்கள் மற்றும் ஏனையோரிடமிருந்து பெறப்பட்ட அனைத்து பங்களிப்புத் தொகையின் காலாண்டு விவரங்கள்;

(iv) அறக்கட்டளையின் அனைத்துக் கூட்ட நிகழ்ச்சி நிரல்கள், கூட்டக்குறிப்புகள் மற்றும் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைக் குறித்த அறிக்கைகள்;

(v) ஆவணம் வழங்கப்பட்ட நாளிலிருந்து முப்பது நாட்களுக்குள் ஐந்தாண்டுகள் தொலைநோக்குத் திட்டம், அறக்கட்டளை நிதி முதலீட்டு விவரங்கள், ஆண்டு திட்டங்கள் மற்றும் வரவு செலவுத் திட்டம், பணி ஆணைகள் மற்றும் ஆண்டறிக்கை

(vi) தற்போது செயல்படுத்தப்பட்டு வருகிற திட்டங்களின் நிலை – பணி குறித்த விவரம், பயனாளிகளின் விவரங்கள், மதிப்பீட்டுத் தொகை, செயற்படுத்தும் முகமைகளின் பெயர், பணியை தொடங்குவதற்கும் பணியை நிறைவு செய்வதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ள நாள், முந்தைய காலாண்டு வரையிலான நிதிநிலை மற்றும் பணி மேம்பாடு முதலியவை உட்பட அறக்கட்டளையால் மேற்கொள்ளப்பட்டு வருகிற அனைத்து திட்டப்பணிகள் அல்லது திட்டங்களின் மேற்கொள்ளப்பட்டு வருகிற செயல்பாட்டு நிலை அல்லது பணி முன்னேற்ற நிலை.

(vii) பல்வேறு நலத்திட்டங்களின் கீழுள்ள பயனாளிகளின் பட்டியல்; மற்றும்

(viii) 2005ஆம் ஆண்டு தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 22/2005) கீழ் தன்னியல்பாக வெளிப்படுத்துதல்.

(2) திட்டப்பணி நடைபெறும் இடத்தில் அறக்கட்டளையானது திட்ட விவரங்களையும் ஒப்பளிக்கப்பட்ட தொகையையும் அறிவிப்புப் பலகையில் காட்சிப்படுத்த வேண்டும்.

(3) அறக்கட்டளை நிதியின் கீழ் செயற்படுத்தப்படுகிற திட்டங்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு, சமூக ஊடகம், திரைப்படங்கள், வீடியோக்கள் முதலியன வாயிலாக தகவல், கல்வி மற்றும் தகவல் தொடர்பு செயற்பாடுகளுக்கு அறக்கட்டளை பொறுப்பேற்க வேண்டும்.

(4) அறக்கட்டளை, வரையறுக்கப்பட்ட வடிவமைவுகளிலும் குறிப்பிடப்பட்ட முறையிலும், உள்ளபடி நிதி வைப்பீடுகள் மற்றும் பணி செயலாக்கங்கள் உட்பட அதன் செயல்பாடு குறித்த தகவல்களை மாநில அரசுடனும், இந்திய அரசின் சுரங்க அமைச்சகத்துடனும் பகிர வேண்டும்.

(5) மத்திய அரசால் அறிவிக்கையிடப்படும் நாளிலிருந்து மத்திய அரசால் உருவாக்கப்படவுள்ள வலைவாசல் வாயிலாக, திட்டங்களுக்கான நிதி ஒப்பளிப்பு, நிதி விடுவிப்பு மற்றும் திட்டப்பணி செயலாக்கத்தை கண்காணித்தல் ஆகியவற்றை அறக்கட்டளைக் கட்டாயம் மேற்கொள்ள வேண்டும்.

**24. மாநில அளவிலான கண்காணிப்புக் குழு.–** (1) அரசு, தலைமைச் செயலாளரின் தலைமையில் செயல்துறைகளின் அதாவது நிதி மற்றும் திட்டமிடல் துறைகளின் செயலாளர்கள் மற்றும் மத்திய சுரங்க அமைச்சகத்தைச் சேர்ந்த இந்திய சுரங்கப் பணியகத்தின் (இந்திய பியூரோ ஆஃப் மைன்ஸ்) பிரதிநிதி ஒருவரை உறுப்பினராகக் கொண்டு மாநில அளவிலான கண்காணிப்புக் குழு ஒன்றை அமைக்க வேண்டும்.

(2) மாநிலத்திலுள்ள அறக்கட்டளைகளை மேற்பார்வையிடுவதற்கு, இயற்கை வளங்கள் துறை அல்லது அரசால் பொறுப்பு ஒப்படைக்கப்பட்ட ஏனைய யாதொரு துறையின் செயலாளர் மாநில அளவிலான கண்காணிப்புக் குழுவின் உறுப்பினர் செயலராக இருப்பார்.

(3) புவியியல் மற்றும் சுங்கத்துறை இயக்ககம் அல்லது அரசால் பொறுப்பு ஒப்படைக்கப்பட்ட ஏனைய யாதொரு துறை, மாநிலத்திலுள்ள அறக்கட்டளைகளின் செயற்பாடுகளைக் கண்காணிப்பதற்கு மாநில அளவிலான ஒருங்கிணைப்பு மாவட்ட கனிம அறக்கட்டளைப் பிரிவு ஒன்றை அமைத்து மாநில அளவிலான கண்காணிப்புக் குழுவின் தலைமைச் செயலகமாகச் செயல்படும்.

(4) மாநில அளவிலான கண்காணிப்புக் குழு, அறக்கட்டளைகளின் செயல்பாட்டையும் வெளிப்படைத்தன்மை விதிமுறைகள் பின்பற்றப்படுகின்றனவா என்பதையும், அறக்கட்டளைகளின் தணிக்கை அறிக்கைகளையும் ஆண்டறிக்கைகளையும் கண்காணிக்க வேண்டும்.

(5) மாநில அளவிலான கண்காணிப்புக் குழு ஆண்டிற்கு இருமுறையேனும் கூட வேண்டும்.

**25. தண்டத்தொகை.–** விதி 9–ஐ மீறுபவர் எவராயினும், அத்தகைய விதிமீறல் காலத்திற்கான பன்னிரண்டு விழுக்காடு வட்டியுடன் சேர்த்து வழங்கப்பட வேண்டிய பங்களிப்புத் தொகையுடன், ஒரு முறை வழங்கப்பட்ட பங்களிப்புத் தொகைக்கு இணையான தொகை வசூலிக்கப்படும்.

**26. குறைதீர்வு.–** (1) தலைவரிடம் அல்லது அரசால் அறிவிக்கையிடப்பட்டவாறான ஏனைய யாதொரு அலுவலரிடம் புகார் தெரிவிக்கப்பட்ட நாளிலிருந்து முப்பது நாட்களுக்குள் குறைகளுக்குத் தீர்வு காண்பதற்காகவும், புகார்தாரருக்கு உரிய பதிலளிப்பதற்காகவும் குறைதீர் செயல்முறைத்திட்டத்தை அறக்கட்டளை உருவாக்கி செயற்படுத்த வேண்டும்.

(2) மாநில அரசு, யாதொரு புகார் அல்லது பொது மக்களின் குறை வரப்பெற்றவுடன், நிர்ணயிக்கப்பட்ட கால அளவிற்குள் ஒவ்வொரு குறையும் அறக்கட்டளையால் தீர்வு செய்யப்பட்டு புகார்தாரருக்கு உரிய பதிலளிக்கப்பட்டுள்ளதை உறுதி செய்யலாம்.

**27. இணக்க முறை.–** (1) அனைத்து நேர்வுகளிலும், அறக்கட்டளை பின்வருவனவற்றை மேற்கொள்ளுமாயின் நேர்விற்கேற்ப, மத்திய அரசு அல்லது மாநில அரசு, யாதொரு அல்லது அனைத்து புதிய பணிகளையும் அல்லது யாதொரு அல்லது ஏற்கனவே ஒப்பளிக்கப்பட்ட அனைத்து பணிகளையும் நிறுத்துமாறும் மற்றும் / அல்லது அறக்கட்டளை நிதி வைப்பீடு செய்யப்பட்டுள்ள வங்கியிலிருந்து / வங்கிகளிலிருந்து யாதொரு அல்லது அனைத்து பணிகளுக்கான நிதிகள் வழங்கப்படுவதை நிறுத்தி வைக்குமாறு அல்லது அறக்கட்டளையிலிருந்து நிதி பரிமாற்றம் செய்யப்பட்டுள்ள செயல்படுத்தும் முகமைகளின் வங்கிக் கணக்கை நிறுத்தி வைக்குமாறும் உத்தரவிடலாம். அவையாவன:–

(a) விதி 14–க்கு முரணாக யாதொரு நிதிபரிமாற்றம் செய்தல்;

(b) விதி–14–இல் குறிப்பிடப்பட்டவாறாக அறக்கட்டளை நிதியை பேண தவறுதல்;

(c) விதி 20–இல் குறிப்பிடப்பட்டவாறாக கணக்குகளைத் தணிக்கை செய்யத் தவறுதல்;

(d) விதி 22–இல் குறிப்பிடப்பட்டவாறாக, ஆண்டறிக்கையத் தயாரித்து வெளியிட தவறுதல்;

(e) விதி 23–இல் உள்ள யாதொரு விதித்துறைகளுக்கு இணங்கி செயல்பட தவறுதல்; மற்றும்

(f) மத்திய அரசின் அல்லது மாநில அரசின் அறிவுறுத்தல்களை பின்பற்றத் தவறுதல்

(2) மத்திய அரசு அல்லது மாநில அரசு, அறக்கட்டளை தேவையான நடவடிக்கைகளை அவ்வாறு நிறுத்தி வைத்ததை திரும்பப்பெறலாம்.

(3) மத்திய அரசு துணை விதி (1) அல்லது (2)–இன் கீழ் யாதொரு உத்தரவு பிறப்பித்துள்ள நேர்வில், மத்திய அரசு மட்டுமே அந்த உத்தரவை திரும்பப்பெற முடியும்.

**28. அறங்காவலர்களின் கடன்பொறுப்புறுதிகள்.–** (1) நல்லெண்ணம் / உரிய கவனத்துடனான நம்பிக்கையின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட யாதொரு செயலுக்கும் அறங்காவலர்கள் பொறுப்பாக மாட்டார்கள். மேலும், நல்லெண்ணத்தின் அடிப்படையில் வைப்பீடு செய்யப்பட்டுள்ள அல்லது வைக்கப்பட்டுள்ள அறக்கட்டளை நிதியின் யாதொரு முதலீடுகளின் மதிப்பில் ஏற்படும் பற்றாக்குறைக்காக அல்லது குறைபாட்டிற்காக அல்லது வேறு வகையில் தற்செயல் இழப்பிற்காக யாதொரு வங்கியாளருக்கு, தரகருக்கு, பாதுகாவலருக்கு அல்லது யாதொரு நபருக்கு அறங்காவலர்கள் கடமைப்பட்டவர்களாக மாட்டார்கள் அல்லது பொறுப்புடையவர்களாக மாட்டார்கள்.

**29. அறங்காவலர்களின் ஊதியம்.–** அறங்காவலர்கள் தங்களின் பணிகளுக்காக யாதொரு ஊதியமும் பெற உரிமையுடைவர்கள் அல்ல.

**30. அறக்கட்டளை முத்திரை.–** அறங்காவலர்கள், ஆளுகைக் குழுக் கூட்டத்தில், அறக்கட்டளை நோக்கத்திற்காக முத்திரை வழங்க முடிவு செய்யலாம். மேலும், அவ்வப்போது அந்த முத்திரையை அழித்துவிட்டு, அதற்குப் பதிலாக ஒரு புதிய முத்திரையை வைப்பதற்கும் அவர்களுக்கு அதிகாரம் உள்ளது. அறக்கட்டளையின் முத்திரை, தலைவரின் பாதுகாப்பில் இருக்கும். மேலும், அறக்கட்டளைக்காகவும் அதன் சார்பாகவும் அந்த முத்திரையைப் பயன்படுத்த தலைவருக்கு அதிகாரம் உண்டு.

**31. இரத்து செய்யும் அதிகாரம்.–** எழுத்துப்பூர்வமாகப் பதிவு செய்யப்பட்ட காரணங்களுக்காக, அவசியெமெனில் அறக்கட்டளையின் உரிமையை இரத்து செய்ய அரசிற்கு முழு அதிகாரம் உள்ளது. அரசு முடிவு செய்யும் காலம் வரையில் அறக்கட்டளை தொடர்ந்து நீடித்திருக்கும். அறக்கட்டளை முடிவுக்கு வரும் நேரத்தில், அறக்கட்டளையின் அனைத்து சொத்துக்களும் கடன்பொறுப்புறுதிகளும் அரசுக்கு மாற்றப்படும்.

**சுன்சோங்கம் ஜதக் சிரு,**
*அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் (மு.கூ.பொ).*

**பிற்சேர்க்கை.**

(2025 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட கனிம வள அறக்கட்டளை விதிகளின் 6
–ஆம் விதியைச் சேர்ந்த துணை விதி (6)– ஐக் காண்க)

மாவட்ட கனிம வள அறக்கட்டளை ஒப்பாவணம்

இந்த அறக்கட்டளை ஒப்பாவணம், இரண்டாயிரத்து ________ ஆம் ஆண்டில்,
__________ ஆம் நாளில், ___________ ஆம் இடத்தில் நிறைவேற்றப்பட்டது.

'தலைமைச் செயலகம், புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை – 9' என்ற அலுவலக முகவரியிலுள்ள தமிழ்நாடு அரசின் இயற்கை வளங்கள் துறையின் அரசுச் செயலாளர் பிரநிதித்துவப்படுத்திய தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் (இதன்பின்னர் அறக்கட்டளை நிறுவனர் என்று அழைக்கப்படுவார்) ஒரு தரப்பாகவும்

மறுதரப்பான பின்வரும் அறங்காவலர்கள் ஆதரவாகவும் இந்த ஒப்பாவணம் செய்யப்படுகிறது. மேலும் இந்த தொடர் சூழலுக்கு முரணாக அல்லது பொருந்தாததாக இருந்தாலன்றி, பதவிப்பெயரின் அடிப்படையில் அப்பதவிக்கு அடுத்து வருபவர்களை குறிக்கும் மற்றும் அவர்களையும் உள்ளடக்கியிருக்கும். அதாவது:–

தொடர் எண். (____) பெயர் (________) ஆளுகைக் குழுவின் பதவிப்பெயர்

1.

2.

3.

1957 ஆம் ஆண்டு சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் (மேம்பாடு மற்றும் ஒழுங்குமுறை) சட்டத்தின் (மத்திய சட்டம் 67 / 1957) 9B –ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவு, அரசால் வரையறுக்கப்பட்டவாறான அத்தகைய முறையில், சுரங்கம் தொடர்பான செயல்பாடுகளால் பாதிக்கப்பட்ட நபர்கள் மற்றும் பகுதிகளின் நலனுக்காகவும் நன்மைக்காகவும் செயல்படுவதை நோக்கமாகக் கொண்டு ஒரு இலாப நோக்கமற்ற அமைப்பாக, மாவட்ட கனிம வள அறக்கட்டளை ஒன்றை அரசு நிறுவுவதற்கு வழிவகை செய்வதாலும்,

மேலும், மேற்சொன்ன சட்டத்தின் 15 ஆம் பிரிவைச் சேர்ந்த உட்பிரிவு (4) மற்றும் பிரிவு 15A மற்றும் பிரிவு 9B இன் கீழ் வகுக்கப்பட்ட 2025 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட கனிம வள அறக்கட்டளை விதிகள், மாவட்ட கனிம வள அறக்கட்டளையின் அமைப்பு மற்றும் செயல்பாடுகள், அந்த அறக்கட்டளை செயல்பட வேண்டிய நடைமுறை மற்றும் சலுகை பெற்ற குத்தகைதாரர்கள் அறக்கட்டளைக்கு செலுத்தப்பட வேண்டிய தொகை ஆகியவற்றுக்கு வழிவகை செய்வதாலும்;

மேலும், இந்த நோக்கத்திற்காக, நிறுவனர், அரசின் கீழ் ஒரு ''இலாப நோக்கமற்ற'' அமைப்பாக ஒரு அறக்கட்டளையை அமைக்கவும், சமூகத்தின் பொது நலனுக்காக ஒரு முக்கியப் பங்காற்றுவதற்கும், அரசால் வரையறுக்கப்பட்டவாறான அத்தகைய முறையில், சுரங்கம் தொடர்பான செயல்பாடுகளால் பாதிக்கப்பட்ட நபர்கள் மற்றும் பகுதிகளின் நலனுக்காகவும் நன்மைக்காகவும் இந்த அறக்கட்டளையின் நிதியைப் பயன்படுத்தவும் முடிவு செய்துள்ளதாலும்;

மேலும், மாவட்ட கனிம வள அறக்கட்டளையை நிறுவுவதில் விருப்பம் கொண்டுள்ள மாவட்ட ''அறக்கட்டளை நிறுவனர்'' ரூ.1,000/– (ஆயிரம் ரூபாய் மட்டும்) தொகையை அறங்காவலர்களின் கட்டுப்பாட்டின் கீழ் ஒப்படைத்துள்ளார், இதன்பின்னர் இத்தொகை ''ஆரம்ப தீர்வுத்தொகை'' என்று குறிப்பிடப்படும்.

தற்போது, இந்த அறக்கட்டளை ஒப்பாவணத்தின் விவரம் வருமாறு:–

1. **விளக்கம் மற்றும் வரையறைகள்.** (1) இந்த அறக்கட்டளை ஒப்பாவணத்தில், சூழல் அனுமதிக்கும் இடங்களிலெல்லாம், பின்வரும் சொற்கள் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள பொருள் விளக்கத்தை கொண்டிருக்கும், அவையாவன:–

**(அ)** **'சட்டம்'** என்பது 1957 ஆம் ஆண்டு சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் (மேம்பாடு மற்றும் ஒழுங்குமுறை) சட்டம் (மத்திய சட்டம் 67 / 1957) எனப் பொருள்படும்;

**(ஆ)** **''தணிக்கையாளர்''** என்பது, தமிழ்நாடு கணக்குத்துறைத் தலைவரால் அறிவிக்கையிடப்பட்டு ஏற்பளிக்கப்பட்ட தணிக்கையாளர்களிலிருந்து அறங்காவலர்களால் நியமிக்கப்பட்ட தணிக்கையாளர் அல்லது அறக்கட்டளை நிறுவனரால் நேமகம் செய்யப்பட்டபிற தணிக்கையாளர்கள் எனப் பொருள்படும்;

**(இ)** **''பங்களிப்பு''** என்பது பின்வருபவர்களிடமிருந்து வசூலிக்கப்பட வேண்டிய பங்களிப்பு எனப் பொருள்படும் –

(i) சட்டத்தின் 9B ஆம் பிரிவைச் சேர்ந்த உட்பிரிவு (5)–இன் விதித்துறைகளின் கீழ் ஒரு சுரங்கக் குத்தகை அல்லது ஒருங்கிணைந்த உரிமம் ஒன்றினை பெற்றவர்கள்;

(ii) சட்டத்தின் 9B ஆம் பிரிவைச் சேர்ந்த (6) உட்பிரிவின் விதித்துறைகளின் கீழ் சுரங்கக் குத்தகை ஒன்றினை பெற்றவர்கள்; மற்றும்

(iii) நேர்விற்கேற்ப, மத்திய அரசால் அல்லது மாநில அரசால், மாவட்டத்தில், வரையறுக்கப்பட்டவாறான சட்டத்தின் பிரிவு 15A – இன் விதித்துறைகளின் கீழ் சிறு கனிமச் சலுகை பெற்றவர்கள்;

(d) **''நிதி''** என்பது 2025 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட கனிம வள அறக்கட்டளை நிதி விதிகளின் 8 மற்றும் 9 ஆம் விதிகளின் படி உருவாக்கப்பட்ட மாவட்ட கனிம வள அறக்கட்டளை நிதி எனப் பொருள்படும்.

(e) **'மாவட்ட மாஜிஸ்திரேட்டு'** என்பவர் மாவட்ட அளவிலான வருவாய் நிருவாக தலைவர் எனப் பொருள்படும்;

(1) **''ஆளுகைக் குழு''** என்பது மாவட்ட கனிம வள அறக்கட்டளையின் அனைத்து அறங்காவலர்கள் எனப் பொருள்படும்;

(g) **''அறக்கட்டளை''** என்பது அரசால் உருவாக்கப்பட்ட ________ (மாவட்டத்தின் பெயர்) மாவட்ட கனிம வள அறக்கட்டளை எனப் பொருள்படும்;

(h) **''ஆண்டு''** என்பது ஏப்ரல் திங்கள் 1 ஆம் நாள் தொடங்கி அடுத்த ஆண்டின் மார்ச்சு திங்கள் 31 ஆம் நாளுடன் முடிவடையும் ஒரு நிதியாண்டு அல்லது மார்ச்சு திங்கள் 31 ஆம் நாளுடன் முடிவடையும் அதன் பகுதி கால அளவு எனப் பொருள்படும்.

(2) ஒருமையில் உள்ள சொற்கள் பன்மையையும், பன்மையில் உள்ள சொற்கள் ஒருமையையும் உள்ளடக்கும்.

(3) ஆண்பாலைக் குறிக்கும் சொற்கள் பெண்பாலையும், பொதுப்பாலினத்தை உள்ளடக்கும்.

(4) இந்த ஒப்பாவணத்தில் உள்ள தலைப்புகள் மற்றும் துணைத் தலைப்புகள் இதன் விதித்துறைகளைக் குறிப்பிடுவதற்காக மட்டுமே சேர்க்கப்பட்டுள்ளன, மேலும் அவை அத்தகைய விதித்துறைகளின் விளக்கத்தை / பொருள் கொள்ளுதலை பாதிக்காது.

2. **அறக்கட்டளையின் பெயர்.** இந்த அறக்கட்டளை ___________(மாவட்டத்தின் பெயர்) மாவட்ட கனிம வள அறக்கட்டளை என்று அழைக்கப்படும், மேலும் அதன் அலுவலகம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அல்லது மாவட்ட ஆட்சியரால் தீர்மானிக்கப்படும் பிற இடத்தில் அமைந்திருக்கும்.

3. **அறக்கட்டளையின் நோக்கங்கள்.–** 2025 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட கனிம வள அறக்கட்டளை விதிகளின் விதி 13–இல் வகைச்செய்யப்பட்டுள்ளவாறான நடைமுறையில், மாவட்டத்தில் சுரங்கத் தொழில் தொடர்பான நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட நபர்களின் மற்றும் பகுதிகளின் நலனுக்காகவும் பயனுக்காகவும் செயலாற்றுவதே மாவட்ட கனிம வள அறக்கட்டளையின் நோக்கமாகும்.

4. **நியமனம் மற்றும் அறிவிப்பு.** (1) இதனால் உருவாக்கப்படும் இந்த அறக்கட்டளைக்கான அறங்காவலர்களை (Trustees), அறக்கட்டளை நிறுவனர் இதனால் நியமிக்கிறார். மேலும், இங்கு குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டு, அறங்காவலர்கள் அந்த நியமனத்தை ஏற்றுக்கொள்கிறார்கள்.

(2) அதிகாரபூர்வ பதவியின் அடிப்படையில் இதனால் நியமிக்கப்பட்டுள்ள அறங்காவலர்கள் அவர்கள் அந்தப் பதவியும் பதவி பெயரும் வகிக்கும் காலம் முழுவதும் அறங்காவலர்களாகவே தொடர்ந்து செயல்படுவர். அவர்கள் எந்தப் பதவியின் அடிப்படையில் நியமிக்கப்பட்டார்களோ, அந்தப் பதவியிலிருந்து அற்று போகும் போது அவர்கள் அறங்காவலர்களாக இருப்பதிலிருந்து அற்றுப்போவர். மேலும் அவர்களுக்கு பின் அந்தப் பதவிக்கு வருபவர்கள், அத்தகைய அதிகாரபூர்வ பதவியை ஏற்றுக் கொள்ளும் நாளிலிருந்தே, அவர்களின் இடத்தில் அறங்காவலர்களாக நியமிக்கப்பட்டதாகக் கருதப்படுவர்.

(3) அறக்கட்டளை நிறுவனர் தமக்குப் பொருத்தமெனக் கருதும் நேர்வில் யாதொரு பிரிவைச் சேர்ந்த அறங்காவலர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கலாம்.

(4) அறக்கட்டளை நிறுவனர் தனது சொந்த விருப்பத்தின் பேரில் யாதொரு நேரத்திலும் யாதொரு அறங்காவலரையும் நீக்கிவிட்டு, வேறு யாதொரு நபரையும் அறங்காவலராக நியமிக்கலாம். அவ்வாறு அறக்கட்டளை நிறுவனரால் அகற்றப்பட்ட அறங்காவலர் அத்தகைய பதவி அகற்றப்பட்ட நாளிலிருந்து அறங்காவலராக நீடிப்பதிலிந்து அற்றுப்போவார்.

(5) இந்த அறக்கட்டளை நிதியானது, இதில் அறிவிக்கப்பட்டுள்ள மற்றும் அடங்கியுள்ள அதிகாரங்கள் மற்றும் விதித்துறைகளுக்குட்பட்டு அறங்காவலர்களின் வசம் இருக்கும். மேலும், அறங்காவலர்கள் அந்த அறக்கட்டளைக் காலத்தின் போது எந்த நேரத்திலும், யாதொரு நபர் அல்லது நபர்களிடமிருந்தும், ஏனைய அறக்கட்டளைகளின் விதித்துறைகளின் படி அல்லது வேறு எந்த முறையிலும் வழங்கப்படும் எந்தச் சொத்தையும், அந்தச் சொத்து அறக்கட்டளை நிதிக்கு சேர்க்கையாக (accretion) வைத்திருக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் அறங்காவலர்கள் ஏற்றுக் கொள்ளும் அதிகாரம் உடையவர்களாக இருப்பர்.

5. **அறக்கட்டளையின் மேலாண்மை.** அறக்கட்டளையின் மேலாண்மை அதிகாரமானது அறக்கட்டளையின் அனைத்து உறுப்பினர்களையும் கொண்ட ஆளுகைக் குழுவிடம் நிலை பெற்றிருக்கும். இருப்பினும், அறக்கட்டளையின் அன்றாட மேலாண்மையானது, கீழே பத்தி 9– இல் வரையறுக்கப்பட்டுள்ளவாறாக, ஒரு மேலாண்மைக் குழுவால் நிருவகிக்கப்படும். இருப்பினும், அறக்கட்டளை நிறுவுனர் யாதொரு நேரத்திலும் மேலாண்மைக் குழுவின் அமைப்பை மாற்றியமைக்க முடிவு செய்யலாம். ஆளுகைக் குழு மற்றும் மேலாண்மைக் குழுவின் அதிகாரங்களும் செயல்பாடுகளும் இதில் குறிப்பிடப்பட்டுள்ளவாறாக அமையும்.

6. **அறங்காவலர்களின் முடிவுகள்.** (1) ஆளுகைக் குழுவின் கூட்டத்தில் அறங்காவலர்களின் அனைத்து முடிவுகளும் எடுக்கப்படும், மேலும் ஆளுகைக் குழுவின் ஒவ்வொரு கூட்டமும் அறக்கட்டளையின் கூட்டமாகக் கருதப்படும்.

(2) ஆளுகைக் குழுவின் அனைத்து தீர்மானங்களும், கூட்டத்தில் கலந்து கொண்டு வாக்களிக்கும் உறுப்பினர்களின் பெரும்பான்மை வாயிலாக நிறைவேற்றப்பட வேண்டும். வாக்குகள் சமமாக இருந்தால், கூட்டத்தின் தலைவருக்கு வாக்களிப்பதற்கான உரிமை உண்டு.

(3) அறக்கட்டளை நிறுவனர், ஒப்புக்கொண்டாலன்றி, அறக்கட்டளை பொறுப்பாளர்கள் இந்த அறக்கட்டளை ஒப்பாவணத்தின் யாதொரு பகுதியையும் திருத்தக்கூடாது.

(4) அறக்கட்டளை பொறுப்பாளர்கள், ஆளுகைக் குழு மற்றும் நிருவாகக் குழு ஆகியவை அறக்கட்டளை நிறுவனரால் அவ்வப்போது வழங்கப்படும் அறிவுறுத்தல்கள், வழிகாட்டுதல்களுக்கு இணக்கமாக செயல்பட வேண்டும்.

7. **ஆளுகைக் குழுவின் அதிகாரங்களும் செயல்பாடுகளும்.–**

அனைத்து அறக்கட்டளை பொறுப்பாளர்கள் அடங்கிய ஆளுகைக் குழுவானது பின்வரும் அனைத்து பணிகளுக்கும் பொறுப்பானவர்களாவர். அவையாவன:–

(i) தொடர்புடைய சுரங்க குத்தகைதாரர்களிடமிருந்து பங்களிப்பு தொகையை வசூலித்தல் மற்றும் கணக்கு விவரங்களைக் கண்காணித்தல்;

(ii) அவ்வப்போது அறக்கட்டளை நிதியின் செலவினங்களை மேற்பார்வையிடுதல், கண்காணித்தல் மற்றும் மதிப்பாய்வு செய்தல்;

(iii) நிருவாகக் குழு தயாரித்த மாவட்டத்தில் சுரங்கத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளின் புதுப்பிக்கப்பட்ட பட்டியலுக்கு ஏற்பளித்தல்;

(iv) தொலைநோக்குத் திட்டத்தை உருவாக்குவதற்கான அடிப்படை ஆய்வை நடத்த கல்வி நிறுவனம் அல்லது புகழ்பெற்ற அமைப்பு அல்லது நிறுவனங்களை ஈடுபடுத்துதல்;

(v) நிருவாகக் குழு தயாரித்த வருங்காலத் திட்ட ஆவணம் மற்றும் தொலைநோக்குத் திட்டத்துக்கு ஏற்பளித்தல்;

(vi) ஏற்பளிக்கப்பெற்ற தொலைநோக்குத் திட்டத்தின்படி நிருவாகக் குழு தயாரித்த அறக்கட்டளையின் ஆண்டுத் திட்டம் மற்றும் ஆண்டு வரவு செலவு அறிக்கைக்கு ஏற்பளித்தல்;

(vii) அறக்கட்டளை நிதிகளின் பயன்பாட்டின் முன்னேற்றத்தைக் கண்காணித்தல்;

(viii) ஏற்பளிக்கப்பெற்ற திட்டங்கள் மற்றும் திட்டப்பணிகளை செயல்படுத்துவதிலுள்ள முன்னேற்றத்தை ஆய்வு செய்தல் மற்றும் கண்காணித்தல்;

(ix) ஆண்டறிக்கையுடன் சேர்த்து தணிக்கை செய்யப்பட்ட கணக்கு விவரங்களுக்கும் ஏற்பளித்தல்;

(x) அறக்கட்டளை பொறுப்பாளர்களால் வரையறுக்கப்படும் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் அடிப்படையில் ஆளுகைக் குழுவின் கூட்டத்தில் அறக்கட்டளை நிதியைத் தணிக்கை செய்ய ஒரு தணிக்கையாளரை நியமித்தல்;

(xi) அறக்கட்டளையின் நலன்களைப் பாதுகாப்பதற்காக அதன் கடமைகளை நிறைவேற்றுவதில் கடமை பற்றுறுதியுடன் செயல்படுதல்;

(xii) அறக்கட்டளையின் சீரான செயல்பாடு மற்றும் நிருவாகத்திற்குத் தேவையான ஏனைய அனைத்து பணிகளையும் மேற்கொள்ளுதல்.

**8. ஆளுகைக் குழுவின் கூட்டங்கள். (1)** ஆளுகைக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் வசதிக்கேற்ப, தலைவரால் தீர்மானிக்கப்பட்டு ஆளுகைக் குழுக்கூட்டம் ஓராண்டிற்கு குறைந்தது இரண்டு முறை கூட்டப்படும்.

(2) அத்தகைய கூட்டத்தின் குறைவெண்வரம்பு மொத்த உறுப்பினர்களில் ஐம்பது விழுக்காட்டிற்கும் அதிகமாக இருக்க வேண்டும். இருப்பினும், தேர்ந்தெடுக்கப்பட்ட மொத்த பிரதிநிதிகளில் குறைந்தது ஐம்பது விழுக்காடு உறுப்பினர்களாவது குறைவெண்வரம்பில் இருக்க வேண்டும்.

**9. நிருவாகக் குழு.**

நிருவாகக் குழு, பின்வரும் அதிகாரிகளைக் கொண்டு அறக்கட்டளையின் விவகாரங்களை நிருவகிக்கும். அவர்கள் விவரம் வருமாறு:—

(i) மாவட்ட ஆட்சியர் — தலைவர்;

(ii) புவியியல் மற்றும் சுரங்கத் துறையின் துணை இயக்குநர் அல்லது உதவி இயக்குநர் — உறுப்பினர்—செயலர் மற்றும் ஒருங்கிணைப்பாளர்,

(iii) திட்டப்பணி இயக்குநர் — மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை — உறுப்பினர்;

(iv) துணை இயக்குநர் (சுகாதாரம்) — உறுப்பினர்;

(v) முதன்மைக் கல்வி அலுவலர் — உறுப்பினர்;

(vi) மாவட்டக் கருவூல அலுவலர் — உறுப்பினர்;

(vii) மாவட்ட சமூக நல அலுவலர் — உறுப்பினர்;

(viii) உதவி இயக்குநர் (ஊராட்சி) — உறுப்பினர்;

**10. நிருவாகக் குழு கூட்டங்கள்.** நிருவாகக் குழுவின் கூட்டம் ஒரு நிதியாண்டின் ஒவ்வொரு காலாண்டிலும் குறைந்தது ஒரு முறையாவது நடத்தப்பட வேண்டும், மேலும் அத்தகைய கூட்டம் நிருவாகக் குழுவின் தலைவரால் தீர்மானிக்கப்பட்டவாறு கூட்டப்பட வேண்டும்.

**11. நிருவாகக் குழுவின் அதிகாரங்களும் செயல்பாடுகளும்:**

நிருவாகக் குழுவானது—

(i) சட்டத்தின் விதித்துறைகள் மற்றும் அதன் கீழ் இயற்றப்பட்ட விதிகளின்படி தொடர்புடைய சுரங்க குத்தகைதாரர்களிடமிருந்து பங்களிப்பை சரியான நேரத்தில் வசூலிப்பதை உறுதி செய்யும்.

(ii) மாவட்டத்தில் சுரங்கத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளின் நாளதுவரையாக்கப்பட்ட பட்டியலைத் தயாரித்து அதை வைத்துவரும்;

(iii) அறக்கட்டளையால் அல்லது யாதொரு அரசுத் துறையால் பணியமர்த்தப்பட்ட யாதொரு நிறுவனங்களால் அல்லது முகமைகளால் நடத்தப்படும் அடிப்படை ஆய்வின் அடிப்படையில் தொலைநோக்கு ஆவணத்தையும் தொலைநோக்குத் திட்டத்தையும் தயாரித்து அறக்கட்டளையின் ஒப்புதலுக்காக அளிக்கும்;

(iv) ஏற்பளிக்கப்பெற்ற தொலைநோக்குத் திட்டத்தின்படி அறக்கட்டளையின் ஆண்டுத் திட்டம் மற்றும் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தை தயாரிக்கும்;

(v) ஆண்டுத் திட்டம் மற்றும் ஏற்பளிக்கப்பெற்ற திட்டங்கள் மற்றும் திட்டப் பணிகளை மேற்பார்வையிட்டு செயல்படுத்துவதை உறுதி செய்யும்;

(vi) நிருவாகக் குழு அதன் கடமைகளை நிறைவேற்றும் போது, கொள்கை கட்டமைப்பு மற்றும் ஆளுகைக் குழுவால் அவ்வப்போது வழங்கப்படும் வழிகாட்டுதல்களைப் பின்பற்றும்;

(vii) அறக்கட்டளையின் நலன்களைப் பாதுகாப்பதற்காக அதன் கடமைகளை நிறைவேற்றுவதில் கடமைப் பற்றுறுதியுடன் செயல்படும்;

(viii) திட்டப்பணிகள் முடிக்கப்படுவதை கண்காணிக்கும்;

(ix) நிதியை நிருவகிக்கும் மேலும், அதை சரியான முறையில் முதலீடு செய்வதுடன், அறக்கட்டளையின் பெயரில் வங்கிக் கணக்குகளை தொடங்கவும், அத்தகைய கணக்குகள் மற்றும் முதலீடுகளை நிருவகிக்கும் பணிகளையும் மேற்கொள்ளும்;

(x) அறக்கட்டளை நிதிகளின் பயன்பாட்டை நிருவகிப்பதுடன் கண்காணிக்கும் பணிகளையும் மேற்கொள்ளும்;

(xi) நிதியாண்டு முடிவடைந்த 60 நாட்களுக்குள் ஆளுகைக் குழுவின் ஒப்புதலுக்காக ஆண்டு அறிக்கையுடன் தணிக்கை செய்யப்பட்ட கணக்கு விவரங்களை ஆளுகைக் குழுவிடம் அளிக்கும்;

(xii) அறக்கட்டளையின் சீரான செயல்பாடு மற்றும் நிருவாகத்திற்குத் தேவையான பணிகள் அனைத்தையும் மேற்கொள்ளும்.

**12. அறக்கட்டளையின் நிதி.–** அறக்கட்டளையின் நிதியில் பின்வருவன அடங்கும், அவையாவன:

(i) அறக்கட்டளை நிறுவனர் அளிக்கும் ரூ. 1,000/– (ரூபாய் ஆயிரம் மட்டும்) தொடக்க வைப்புத்தொகை;

(ii) மத்திய அரசால் குறிப்பிடப்பட்ட விகிதங்களில் பெருவாரியான கனிம சலுகைகளை வைத்திருப்பவர்களால் அறக்கட்டளைக்கு அளிக்கப்படும் தொகை;

(iii) சிறு கனிம சலுகைகளை வைத்திருப்பவர்களால் அறக்கட்டளைக்கு அளிக்கப்படும் தொகை.

(iv) வங்கியில் வைப்பீடு செய்யப்பட்ட வைப்புத்தொகைகளுக்கு கிடைக்கும் வட்டி உள்ளிட்ட அனைத்து வரவுகள் மற்றும் வருமானங்கள்;

(v) அறக்கட்டளை, யாதொரு நபரிடமிருந்தோ அமைப்பிடமிருந்தோ பெற்ற தன்னார்வ பங்களிப்புகள் ஏதேனுமிருப்பின்; மற்றும்

(vi) சட்டம் மற்றும் விதிகளை மீறியதற்காக நீதிமன்றம் அல்லது வேறு யாதொரு அதிகார அமைப்பின் ஆணை அல்லது உத்தரவின் பேரில் யாதொரு நபராலும் வைப்பீடு செய்யப்படும் வைப்புத்தொகைகள்.

(vii) முதலீடுகள் மற்றும் பிற வைப்புத்தொகைகள் மற்றும் அவற்றின் மீது திரட்டப்பட்ட வட்டி மற்றும் அவற்றிலிருந்து பெறப்பட்ட ஏனைய யாதொரு வருமானங்கள்;

(viii) அறக்கட்டளையின் ஏனைய அனைத்து சொத்துக்களும் அவற்றிலிருந்து பெறப்பட்ட வருமானம் அல்லது அதன் சொத்து மதிப்பு உயர்வு.

**13. நிதியின் செயல்பாடு/ நிதியை நிருவகித்தல்.** யாதொரு தேசியமயமாக்கப்பட்ட வங்கியிலும் அறக்கட்டளையின் பெயரில் மட்டுமே நிதி வைப்பீடு செய்யப்படும், மேலும் அனைத்து கணக்குகளும் தலைவர் மற்றும் ஒருங்கிணைப்பாளரின் கூட்டு கையொப்பங்களின் கீழ் கையாளப்படும். அறக்கட்டளை நிதி குறித்த கணக்கு விவரங்களை வைத்து வரும்.

**14. நிதியிலிருந்து செலவினம்.–** (1) அறக்கட்டளையிடமுள்ள நிதி, அரசால் அவ்வப்போது அறிவிக்கப்படும் அத்தகைய வழிகாட்டுதல்களுக்குட்பட்டு, அறக்கட்டளையால் தயாரிக்கப்பட்ட ஆண்டறிக்கையின்படி, மாவட்டத்தில் சுரங்கம் தொடர்பான செயல்பாடுகளால் பாதிக்கப்பட்ட நபர்களின் பயன்பாடு, நலன் மற்றும் ஒட்டுமொத்த மேம்பாட்டிற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக பயன்படுத்தப்பட வேண்டும் ;

(2) மாநில அரசு மற்றும் மத்திய அரசின் தற்போதைய திட்டங்கள் அல்லது திட்டப்பணிகளை நிறைவு செய்யும் வகையில், சுரங்கம் தொடர்பான நடவடிக்கைகளால் பாதிக்கப்படக்கூடிய மக்களின் சமூக மற்றும் உட்கட்டமைப்புத் தேவைகளை நிறைவு செய்வதற்கு மேம்பாட்டு நடவடிக்கைகள் மற்றும் நலத்திட்டப்பணிகளுக்கும் அல்லது திட்டங்களுக்கும் சுரங்கப்பணி நடைபெறும் மாவட்டங்களில் சுரங்கப்பணி நடைபெறும்போதும் அதற்குப் பின்னரும் மக்களின் சுற்றுச்சூழல், சுகாதாரம் மற்றும் சமூக–பொருளாதாரம் ஆகியவற்றில் ஏற்படும் பாதகமான தாக்கங்களைக் குறைப்பதற்கு அல்லது தணிப்பதற்கும்; மற்றும் (3) மற்றும் (4)–ஆம் துணை விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு சுரங்கப்பணி நடைபெறும் பகுதிகளில் பாதிக்கப்படக்கூடிய மக்களுக்கு நீண்டகால நிலையான வாழ்வாதாரத்தை உறுதி செய்வதற்கும இந்த நிதி பயன்படுத்தப்படலாம்;

(3) அறக்கட்டளை நிதியில் குறைந்தளவு எழுபது விழுக்காடு தொகையை நேரடியாகப் பாதிக்கப்படக்கூடிய பகுதியில் மட்டுமே செலவிட வேண்டும்.

(4) அறக்கட்டளை நிதியில் எழுபது விழுக்காடு தொகைக்கு குறையாமல் அதிகளவு முன்னுரிமையளிக்க வேண்டிய பின்வரும் துறைகளுக்குப் பயன்படுத்தப்பட வேண்டும்:–

(a) **குடிநீர் வழங்கல்:** மையப்படுத்தப்பட்ட குடிநீர் சுத்திகரிப்பு முறைகள், நீர் சுத்திகரிப்பு நிலையங்கள், குடிநீர் வழங்குவதற்கான தனிப்பட்ட வசதிகள் உட்பட நிரந்தர அல்லது தற்காலிக குடிநீர் வழங்கல் அமைப்பு, குழாய் வழி குடிநீர் வழங்கல் அமைப்பினை நிறுவுதல் ;

(b) **சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் மாசுக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள்:** கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள், நீரோடைகள், ஏரிகள், குளங்கள், நிலத்தடி நீர் மற்றும் அப்பகுதியிலுள்ள ஏனைய குடிநீர் ஆதாரங்கள் மாசுபடுவதைத் தடுத்தல்; சுரங்க செயல்பாடுகள் மற்றும் குப்பைக் கிடங்குகள், சுரங்க வடிகால் அமைப்புமுறை, சுரங்க மாசு தடுப்பு தொழில்நுட்பங்கள் மற்றும் பணி மேற்கொள்ளப்படும் அல்லது பணி கைவிடப்பட்ட சுரங்கங்களுக்கான நடவடிக்கைகள் ஆகியவற்றால் ஏற்படும் காற்று மற்றும் தூசி மாசுபாட்டைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கை; சுற்றுச்சூழலுக்கு உகந்த மற்றும் நிலையான சுரங்க மேம்பாட்டிற்குத் தேவையான ஏனைய காற்று, நீர் மற்றும் மேற்பரப்பு மாசுக் கட்டுப்பாட்டு வழிமுறைகள், புகழ்பெற்ற கல்வி நிறுவனங்கள் அல்லது ஆராய்ச்சி நிறுவனங்களை ஈடுபடுத்துவதன் வாயிலாக குறிப்பிட்ட கனிம மாசுபடுத்திகள் மற்றும் அவற்றின் ஆபத்துக்கான சாத்தியக்கூறுகளை அடையாளங்காணுதல், ஆபத்துகளை அடையாளங்காணுதல், காற்றின் தரத்தை கண்காணிக்கும் கருவிகள் மற்றும் காட்சிப்பலகைகளை அமைத்தல் மற்றும் ஆராய்ச்சியின் பரிந்துரைகளை செயல்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்;

(c) **சுகாதாரம் :** பாதிக்கப்படக்கூடிய பகுதிகளில் முதன்மை அல்லது இரண்டாம் நிலை சுகாதாரப் பராமரிப்பு வசதிகளை ஏற்படுத்துதல், சுகாதாரப் பராமரிப்பு உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல், மருத்துவர்கள் அல்லது உதவி மருத்துவர்கள் அல்லது துணைப் பணியாளர்கள் போன்ற தேவையான பணியாளர்களுக்கு வகைசெய்தல்; அத்தகைய வசதிகளை திறம்பட மேற்கொள்வதற்கும், உள்ளாட்சி அமைப்புகள், மாநில அரசு மற்றும் மத்திய அரசின் தற்போதைய சுகாதாரப் பராமரிப்பு உட்கட்டமைப்பினை ஒருங்கிணைப்பதற்கும், கூடுதலாகச் செயல்படுவதற்கும் தேவையான உபகரணங்கள் மற்றும் பொருட்களை வழங்குதல்; சுரங்கம் தொடர்பான உடல்நலக்குறைபாடு மற்றும் நோய்களைக் கண்டறிவதற்குத் தேவையான சிறப்பு உட்கட்டமைப்பை வடிவமைப்பதற்கு தேசிய சுரங்கத் தொழிலாளர் சுகாதார நிறுவனத்திடம் உள்ள சிறப்புத் திறமைகளைப் பயன்படுத்திக் கொள்ளுதல், சுரங்கத்தால் பாதிக்கப்படக்கூடிய பகுதிகளில் நடமாடும் சுகாதாரப் பராமரிப்பு பிரிவுகள் மற்றும் சுரங்கத்தால் பாதிக்கப்படக்கூடிய நபர்களுக்கான சுகாதாரப் பராமரிப்புக்கான குழு காப்பீட்டுத் திட்டத்தை செயல்படுத்துதல்;

(d) **கல்வி :** பள்ளி அல்லது கல்லூரி அல்லது தொழிற்கல்வி நிறுவனக் கட்டடங்கள், கூடுதல் வகுப்பறைகள், ஆய்வகங்கள், நூலகங்கள், கலை மற்றும் கைவினைப் பொருட்களுக்கான அறைகள், கழிப்பறைத் தொகுப்புகள், குடிநீர் வசதிகள், உண்டு உறைவிடப் பள்ளிகள், பாதிக்கப்படக்கூடிய பகுதிகளைச் சேர்ந்த மாணவர்கள் மற்றும் தொலைதூரப் பகுதிகளிலுள்ள ஆசிரியர்களுக்கான தங்கும் விடுதிகள், விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகள், ஆசிரியர்கள் அல்லது ஏனைய ஆசிரியர் அல்லாத பணியாளர்களை ஈடுபடுத்துதல், இணைய வழி கற்றல் அமைப்புமுறை, பேருந்து அல்லது வேன்/சிற்றுந்து அல்லது மிதிவண்டிகள் அல்லது ரிக்ஷாக்கள் அல்லது ஏனைய போக்குவரத்து வசதிகளுக்கு ஏற்பாடு செய்தல் மற்றும் ஊட்டச்சத்து தொடர்பான திட்டங்கள் மற்றும் பாதிக்கப்படக்கூடிய பகுதிகளிலுள்ள மாணவர்கள் உயர்கல்வித் துறையின் அரசு அல்லது அரசு உதவி பெறும் நிறுவனங்களில் கல்வி கற்க நிதியுதவி அளித்தல் ;

(e) **மகளிர் மற்றும் குழந்தைகள் நலன்:** பாதிக்கப்படக்கூடிய பகுதியில் காணப்படும் தாய் சேய் சுகாதாரப் பிரச்சினைகள், ஊட்டச்சத்து குறைபாடு, தொற்று நோய்கள் அல்லது அத்தகைய ஏனைய பிரச்சினைகளைத் தீர்வு செய்வதற்கான சிறப்புத் திட்டங்கள்;

(f) **முதியோர் மற்றும் மாற்றுத்திறனாளிகளின் நலன்:** முதியோர் மற்றும் மாற்றுத்திறனாளிகளின் நலனுக்கான சிறப்புத் திட்டம் மற்றும் மருத்துவ உதவி மற்றும் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் மறுவாழ்வு மையங்களுக்கு நிதியுதவி வழங்குதல்;

(g) **திறன் மேம்பாடு மற்றும் வாழ்வாதாரத்தை உருவாக்குதல்:** உள்ளூர் தகுதிவாய்ந்த நபர்களுக்கான வாழ்வாதாரத்திற்கான உதவி, வருமானம் ஈட்டுதல் மற்றும் பொருளாதார நடவடிக்கைகள், பயிற்சிக்கான திட்டப்பணிகள் அல்லது திட்டங்கள், பயிற்சிக் கருவிகள், திறன் மேம்பாட்டு மையத்தை மேம்படுத்துதல், தொழில்முனைவோர் பயிற்சி மையம், சுயதொழில் திட்டங்கள், சுய உதவிக்குழுக்களுக்கு ஆதரவளித்தல்; அத்தகைய சுயதொழில் பொருளாதார நடவடிக்கைகளுக்கான முந்தைய மற்றும் பிந்தைய ஆதரவினை வழங்குதல், பாதிக்கப்படக்கூடிய மக்கள் மற்றும் பகுதிகளின் கலை மற்றும் கைவினைப் பொருட்களை மேம்படுத்துவதற்கும் காட்சிப்படுத்துவதற்குமான பணிகளை மேற்கொள்ளுதல், மற்றும் சிறு வனப் பொருட்களை சேகரித்து, பதப்படுத்துதல்;

(h) **சுகாதாரம்:** கழிவுகளை சேகரித்தல், எடுத்துச் செல்லுதல் மற்றும் அகற்றுதல், பொது இடங்களைத் தூய்மை செய்தல், முறையான வடிகால் மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தை அமைக்க வழிவகை செய்தல், மலக் கசடுகளை அகற்றுதல், கழிப்பறைகள் மற்றும் ஏனைய தொடர்புடைய நடவடிக்கைகளுக்கு ஏற்பாடு செய்தல்;

(i) **வீட்டுவசதி:** மத்திய அரசு அல்லது மாநில அரசுத் திட்டங்களின் கீழ் வராத சுரங்கப் பணிகளால் பாதிக்கப்படக்கூடிய மக்களுக்கு நிலையான வீட்டுவசதிக்கு வகை செய்தல்;

(j) **வேளாண்மை :** வேளாண்மை, தோட்டக்கலை மற்றும் வேளாண் காடுகள் தொடர்பான செயல்பாடுகள், பயிற்சியளித்தல் வாயிலாக விவசாயிகளுக்கு உதவுதல், உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் அல்லது கூட்டு நிறுவனங்கள் அல்லது கூட்டுறவு சங்கங்களுக்கு ஆதரவளித்தல்; உணவு பதப்படுத்தும் பிரிவுகள், குளிர்பதன சேமிப்பு உள்ளிட்ட சேமிப்பக வசதிகள், சந்தைகள் போன்ற சந்தைப்படுத்தல் வசதிகள், மருத்துவ மூலிகைகளை நடவு செய்தல் மற்றும் பதப்படுத்துதல்;

(k) **கால்நடை வளர்ப்பு:** கால்நடைகள், கோழி வளர்ப்பு, பன்றி வளர்ப்பு, மீன்பிடித்தல், தீவனம் மற்றும் தீவன உற்பத்தியை ஊக்குவித்தல்; கால்நடை வளர்ப்பு, உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள், சுய உதவிக்குழுக்கள் மற்றும் வேளாண் கூட்டுறவு அமைப்புகளில் புதுமைகளை ஏற்றுக்கொள்ளுதல் ;

(5) **அறக்கட்டளை நிதியில் முப்பது விழுக்காட்டிற்கு மேல் பின்வரும் ஏனைய முன்னுரிமைத் துறைகளுக்குப் பயன்படுத்தப்படக்கூடாது:—**

(a) **உட்கட்டமைப்பு வசதி:** சாலைகள், பாலங்கள், இரயில்வே மற்றும் நீர்வழித் திட்டங்கள் போன்ற தேவையான நேரடி உட்கட்டமைப்பை வழங்குதல்.

(b) **நீர்ப்பாசனம்:** தடுப்பணைகள் மற்றும் திருப்புச் சிற்றணைகள் உள்ளிட்ட மாற்று நீர்ப்பாசன ஆதாரங்களை உருவாக்குதல், பொருத்தமான மற்றும் மேம்பட்ட நீர்ப்பாசன தொழில்நுட்பங்களை பின்பற்றுதல், சொட்டு நீர்ப்பாசனம் உள்ளிட்ட நுண் பாசன வசதிகளுக்கான உதவி மற்றும் ஆள்துளைக் கிணறுகள் மற்றும் வேளாண்மைத் தேவைகளுக்கான மின் இணைப்புகளுக்கான உதவிகளை வழங்குதல்.

(c) **எரிசக்தி மற்றும் நீர்நிலை மேம்பாடு:** நுண் நீர்மின் நிலையம் (மைக்ரோ—ஹைடல்), பரவலாக்கப்பட்ட சூரிய அல்லது ஏனைய புதுப்பிக்கத்தக்க வளங்கள் மற்றும் மழைநீர் சேகரிப்பு அமைப்புமுறை போன்ற மாற்று எரிசக்தி ஆதாரங்களை மேம்படுத்துதல். பழத்தோட்டங்களை மேம்படுத்துதல், ஒருங்கிணைந்த வேளாண்மை மற்றும் வேளாண் காடுகள் மற்றும் நீர்ப்பிடிப்புப் பகுதிகளை மீட்டமைத்தல்.

(d) சுரங்கப் பணிகளால் பாதிக்கப்படக்கூடிய மாவட்டங்களில் சுற்றுச்சூழல் தரத்தை மேம்படுத்துவதற்கான ஏனைய யாதொரு நடவடிக்கைகள்.

(6) அறக்கட்டளையின் நிருவாக, மேற்பார்வை மற்றும் அலுவலகச் செலவுகள் அல்லது நிறுவனச் செலவினங்களுக்கு நிதியின் ஆண்டு வருவாயில் ஐந்து விழுக்காட்டிற்கு மேற்படாத தொகை பயன்படுத்தப்படலாம்.

(7) அறக்கட்டளைக்கு நிருவாக மற்றும் தொழில்நுட்ப உதவிகளை வழங்குவதற்காக, அரசுத் துறைகள் அல்லது மாவட்ட ஊராட்சியின் வழக்கமான பணியாளர்கள் அல்லது அரசால் தீர்மானிக்கப்படக்கூடிய அத்தகைய ஏனைய பணியாளர்களிலிருந்து நியமிக்கப்பட்ட பணியாளர்களின் சேவைகளுக்காக திரட்டப்பட்ட நிதியில், (6)– ஆம் துணை விதிகளில் வழங்கப்பட்டுள்ளவாறாக ஐந்து விழுக்காட்டிலிருந்து மூன்று விழுக்காடு வரையிலான செலவினத்தை அறக்கட்டளை ஏற்கலாம்.

(8) துணை விதிகள் (4) மற்றும் (5) –இல் என்ன சொல்லியிருப்பினும், அறக்கட்டளை நிதி அல்லது அதன் யாதொரு பகுதியும், அதில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களைத் தவிர, யாதொரு பயனாளிக்கும் யாதொரு கடன் அல்லது மானியங்கள் வழங்குவதற்குப் பயன்படுத்தப்படக்கூடாது.

(9) அறக்கட்டளையிலிருந்து மாநில கருவூலத்திற்கு அல்லது மாநில அளவிலான நிதிக்கு எந்தவொரு பெயரில் அல்லது முதலமைச்சரின் நிவாரண நிதி அல்லது ஏனைய யாதொரு நிதிகள் அல்லது திட்டங்களில் யாதொரு வகையிலும் பணப் பரிமாற்றம் செய்யப்படக்கூடாது.

(10) அரசு அல்லது யாதொரு மாநில அளவிலான முகமையும் மாநில அளவில் அறக்கட்டளையின் நிதியிலிருந்து யாதொரு செலவினத்திற்கும் அனுமதி அல்லது ஒப்புதல் அளிக்கக் கூடாது.

(11) 2025 –ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட கனிமவள அறக்கட்டளை விதிகளின் 14–ஆம் விதியைச் சேர்ந்த துணை விதி 2 (c) – இல் வரையறுக்கப்பட்டவாறாக, ஒரு மாவட்டத்திற்குள் நேரடியாகவோ மறைமுகமாகவோ பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு வெளியே அல்லது பாதிக்கப்பட்ட மக்களைத் தவிர வேறு எவருக்கும் யாதொரு நிதியும் செலவிடப்படக்கூடாது.

(12) 2025ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட கனிம அறக்கட்டளை விதிகளின் விதி 14 – ஐச் சேர்ந்த துணை விதி (2) இல் குறிப்பிடப்பட்டுள்ளவை நீங்கலாக, யாதொரு நிதியும் ஒரு மாவட்டத்திலிருந்து மற்றொரு மாவட்டத்திற்கு யாதொரு வகையிலும் மாற்றப்படக்கூடாது.

**15. செலவுகளை வசூலித்தல் –** அறங்காவலர்கள் பின்வரும் செலவுகளை அறக்கட்டளை நிதியிலிருந்து வசூலிக்க உரிமையுடையவர்கள்:–

(1) அறக்கட்டளையின் செயல்பாடு அல்லது நிருவாகத்திற்கு மற்றும் அவற்றை சரி செய்தலுக்காகவும் அறக்கட்டளை நிதியை உள்ளடக்கிய முதலீடுகள் மற்றும் சொத்துக்களைப் பாதுகாத்து வருதல் அல்லது ஆதாயத்திற்காக மற்றும் அறக்கட்டளையின் நலன்களைப் பாதுகாத்து வருவதற்காக உரிய முறையில் செலவிடப்படுகிற அனைத்துச் செலவுகளும்;

(2) பங்களிப்புகளைப் திரட்டுவதற்கு அல்லது சேர்ந்தடையக்கூடியதான ஏனைய யாதொரு நிதியாதாரங்களைப் பெறுவதற்கு அறங்காவலர்களுக்கு ஏற்படுடக்கூடிய அனைத்துச் செலவுகள் (ஏதேனும் ஒப்பந்தம் அல்லது மற்ற ஆவணங்களை நிறைவேற்றுதல் அல்லது பதிவு செய்தல் ஆகியவற்றிற்கு வரு நேர்வான செலவுகள் உட்பட).

(3) அறக்கட்டளையால் மேற்கொள்ளப்படுகிற அல்லது அதற்கு எதிராக மேற்கொள்ளப்படுகிற யாதொரு சட்ட நடவடிக்கைகளுடனும் அல்லது அறக்கட்டளையின் விவகாரங்களுடனும் சம்பந்தப்பட்ட அனைத்து செலவுகள் (யாதொரு சட்ட ஆலோசகரின் தொழில்முறை கட்டணங்கள் மற்றும் செலவுகள் உட்பட)

(4) அறக்கட்டளையின் விவகாரங்கள் தொடர்பாக செலுத்தப்பட்ட/செலுத்த வேண்டிய அனைத்து வரிகள் மற்றும் ஏனைய கட்டணங்கள் உட்பட அறக்கட்டளையின் செயல்பாடு அல்லது செயல்பாட்டில் ஏற்படும் அனைத்து சட்டப்பூர்வ மற்றும் சட்டப்படிக்கான செலவுகள்,; மற்றும்

(5) அதன் கூட்டங்கள் மற்றும் ஏனைய நடவடிக்கைகளை முடிவுக்குக் கொண்டுவருதல் தொடர்பான அனைத்து செலவுகளும்.

**16. கணக்குகளை வைத்துவருதலும் தணிக்கை செய்தலும்.–**(1) அறக்கட்டளை நிதியின் கணக்குகள் மற்றும் தணிக்கை கீழே குறிப்பிடப்பட்டுள்ள முறையில் இருக்க வேண்டும்: –

(a) அறக்கட்டளையின் நிதியாண்டின் கணக்குவைப்பு முறையானது ஏப்ரல் திங்கள் முதல் நாளிலிருந்து அடுத்த ஆண்டின் மார்ச்சுத்த திங்கள் 31ஆம் நாள் வரையில் இருக்க வேண்டும்.

(b) அறக்கட்டளையின் விவகாரங்களை உண்மையான மற்றும் நியாயமான தன்மை மற்றும் பிம்பத்தை வெளிப்படுத்தும் வகையில் அரசு தீர்மானித்தவாறான வடிவில், முறை மற்றும் விதங்களில் அறக்கட்டளை நிதி தொடர்பான உரிய கணக்குப் புத்தகங்கள், ஆவணங்கள் மற்றும் பதிவுருக்களை ஒருங்கிணைப்பாளர் அவரது பொறுப்பில் வைத்து வர வேண்டும்.

(c) ஒவ்வொரு நிதியாண்டு நிறைவடைந்ததிலிருந்து முப்பது நாட்களுக்குள் அறக்கட்டளையால் நியமிக்கப்பட்ட தகுதிவாய்ந்த தணிக்கையாளர்களால் அந்த நிதியாண்டிற்கான அறக்கட்டளையின் கணக்குகள் தணிக்கை செய்யப்பட வேண்டும். தணிக்கையாளர்(கள்) ஆண்டு தணிக்கை அறிக்கையை நிருவாகக் குழுவிடம் அளிக்க வேண்டும், மேலும் அது கிடைத்தவுடன், நிருவாகக் குழு அதன் மொத்த உறுப்பினர்களில் ஐம்பது சதவீதத்திற்கும் அதிகமானோரின்

ஒப்புதலுக்காக, அவ்வாறு அளிக்கப்பட்ட நாளிலிருந்து உயரளவாக முப்பது நாட்களுக்குள், அறிக்கையை ஆளுகைக் குழுவின் முன்னர் வைக்க வேண்டும்.

(2) அறக்கட்டளை, ஆளும் குழுவின் ஒப்புதல் பெற்ற நாளிலிருந்து ஒரு திங்கள் கால அளவிற்குள் அங்கீகரிக்கப்பட்ட தணிக்கை அறிக்கையை அரசிடம் அறக்கட்டளை அளிக்க வேண்டும் மேலும், அதனை அறக்கட்டளையின் வளைதளத்தில் பதிவேற்றம் செய்ய வேண்டும்.

(3) பகுதிகள் (1)—ல் என்ன சொல்லியிருப்பினும், ஒவ்வொரு நிதியாண்டின் முடிவிலும் அறக்கட்டளையின் கணக்குகளை ஆண்டுதோறும் கணக்காய்வுத் தலைவர் (தணிக்கை) தணிக்கை செய்ய வேண்டும்.

**17. நிருவாக ஏற்பாடுகள்** (1) அறக்கட்டளையை நிருவகிப்பதற்கும் செயல்நோக்கத்திற்கான தேவைக்கேற்றவாறாக ஆண்டு திட்டத்தைச் செயல்படுத்துவதற்கும், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பணிபுரிந்து வருகிற பணியாளர்கள் உட்பட அரசின் கட்டுப்பாட்டில் உள்ள பணியாளர்களின் சேவையை அரசு வழங்க வேண்டும்.

(2) அறக்கட்டளைக்குத் தேவையான நிருவாக மற்றும் தொழில்நுட்ப உதவிகளை வழங்குவதற்காக, மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தின் நிரந்தரப் பணியாளர்கள் அல்லது அத்தகைய ஏனைய பணியாளர் நிலைகளிலிருந்து தேவையான எண்ணிக்கையிலான தனிக்குழுவான பணியாளர்களுக்கு மாவட்ட ஆட்சியர் வகைசெய்ய வேண்டும். இத்தகைய பணியாளர்களின் சேவையானது அவர்களின் பதவித்தர நிலையிலேயே தொடர்ந்து நீடிக்கும். இதற்கான செலவினங்களை, விதி 13—ஐச் சேர்ந்த துணை விதி (4)—ன் இரண்டாவது நிபந்தனையில் உள்ளவாறு, அறக்கட்டளையின் நிருவாகத்திற்காக திரட்டப்பட்ட ஐந்து சதவீத நிதியிலிருந்து, மூன்று சதவீதம் வரை அறக்கட்டளை ஏற்றுக்கொள்ளலாம்.

(3) மாநில அரசின் முன் அனுமதியின்றி அறக்கட்டளையின் கீழ் தற்காலிகமான அல்லது நிரந்தரமான பணியிடங்கள் எதனையும் ஏற்படுத்தப்படக்கூடாது.

(4) அறக்கட்டளையின் சீரான செயல்பாட்டிற்குத் தேவைப்படுகிறவாறு, சேவை வழங்குநர்கள் வாயிலாக பதினொரு மாதங்கள் என்ற ஒரு கால அளவிற்கு ஒப்பந்த அடிப்படையில் குறைந்தளவு தேவையான பணியாளர்களை அறக்கட்டளை பணியமர்த்திக் கொள்ளலாம் மேலும் அதன் செயல்பாட்டிற்கான சில்லரைச் செலவினங்களை மேற்கொள்ள வழிவகை செய்யலாம்.

(5) ஐம்பது கோடி ரூபாய்க்கு மேற்பட்டு கூடுதலாக ஆண்டு வசூலிப்புகளைக் கொண்ட அறக்கட்டளை, திட்டமிடல், தொழில்நுட்பம், கணக்குவைப்பு மற்றும் கண்காணிப்பு உதவிக்காக 'செயல்திட்ட மேலாண்மை பிரிவு' ஒன்றை அமைக்க வேண்டும். இத்தகைய பிரிவிற்கான செலவு நிருவாகச் செலவினங்களிலிருந்து ஈடுசெய்யப்பட வேண்டும்.

(6) செயல்திட்ட மேலாண்மை பிரிவு, தகுதியான ஆட்களை ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் மட்டுமே பணியமர்த்தலாம்.

(7) மாநில அரசின் முன் அனுமதியின்றி அறக்கட்டளையின் சார்பில் யாதொரு வாகனமும் வாங்கக்கூடாது.

**18. அறங்காவலர்களின் கடன்பொறுப்புறுதிகள்.—** (1) நல்லெண்ணம் / உரிய கவனத்துடனான நம்பிக்கையின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட யாதொரு செயலுக்கும் அறங்காவலர்கள் பொறுப்பாக மாட்டார்கள். மேலும், நல்லெண்ணத்தின் அடிப்படையில் வைப்பீடு செய்யப்பட்டுள்ள அல்லது வைக்கப்பட்டுள்ள அறக்கட்டளை நிதியின் யாதொரு முதலீடுகளின் மதிப்பில் ஏற்படும் பற்றாக்குறைக்காக அல்லது குறைபாட்டிற்காக அல்லது வேறு வகையில் தற்செயல் இழப்பிற்காக யாதொரு வங்கியாளருக்கு, தரகருக்கு, பாதுகாவலருக்கு அல்லது யாதொரு நபருக்கு அறங்காவலர்கள் கடமைப்பட்டவர்களாகமாட்டார்கள் அல்லது பொறுப்புடையவர்களாக மாட்டார்கள்.

(2) அறங்காவலர்கள் மற்றும் அறங்காவலர்களால் நியமிக்கப்பட்ட ஒவ்வொரு வழக்குரைஞர் அல்லது முகவர், அறக்கட்டளையை நிருவகிப்பதில் அல்லது அவர்களுக்கு அளிக்கப்பெற்ற அல்லது ஒப்படைக்கப்பட்ட அதிகாரங்கள், ,ஆணையுரிமைகள் மற்றும் விருப்புரிமைகளைப் பயன்படுத்துகையில் ஏற்படும் அனைத்துப் பொறுப்புகள், இழப்புகள் மற்றும் செலவுகளுக்கு அறக்கட்டளை நிதியிலிருந்து இழப்பீடு பெற உரிமையுடையவராவர். இருப்பினும், பெருங்கவனக்குறைவு மற்றும்/ அல்லது திட்டமிட்ட தவறான நடத்தையின் காரணமாக நேரிடும் இழப்புகளுக்கு இந்த இழப்பீடு பொருந்தாது; மேலும், அத்தகைய இழப்பீட்டுத் தொகையானது யாதொரு நேர்விலும் மொத்த பங்களிப்புகளுக்கு மிகாமல் இருக்க வேண்டும்.

**19. அறங்காவலர்களின் உழைப்பூதியம்:** அறங்காவலர்கள் தங்களது சேவைகளுக்காக யாதொரு உழைப்பூதியமும் பெற உரிமையற்றவர் ஆவர்.

**20. திருத்தம்:** இந்த அறக்கட்டளைப் பத்திரம், அவ்வப்போது அறங்காவலர்களால் திருத்தப்படலாம். ஆனால் இத்தகைய திருத்தங்கள் அறக்கட்டளை நிறுவுனரின் முன் அனுமதியுடன் மட்டுமே மேற்கொள்ளப்பட வேண்டும்; மற்றவகையில் திருத்தம் செய்ய இயலாது.

**21. அறக்கட்டளையின் முத்திரை:** அறங்காவலர்கள் ஆளுகைக் குழு கூட்டத்தில், அறக்கட்டளையின் நோக்கத்திற்காக ஒரு முத்திரையை உருவாக்க தீர்மானிக்கலாம், அந்த முத்திரையை அவ்வப்போது அழித்து, அதற்குப் பதிலாக புதிய முத்திரையை மாற்றியமைப்பதற்கும் அவர்களுக்கு அதிகாரம் உண்டு. அறக்கட்டளையின் முத்திரை தலைவரின்

பாதுகாப்பில் இருக்க வேண்டும். அறக்கட்டளையின் சார்பாக அந்த முத்திரையைப் பயன்படுத்துவதற்குத் தலைவருக்கு அதிகாரம் உண்டு.

**22. திரும்பப் பெறும் உரிமை :** இந்த அறக்கட்டளையானது அறக்கட்டளை நிறுவுனரின் விருப்புரிமையின் பேரில் கலைக்கப்படும். அறக்கட்டளை நிறுவனர் தீர்மானிக்கும் காலம் வரையில் இந்த அறக்கட்டளை தொடர்ந்து இருக்கும். அறக்கட்டளை கலைக்கப்படும் போது, அறக்கட்டளையின் அனைத்துச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் அரசுக்கு மாற்றப்படும்.

சம்பந்தப்பட்ட தரப்பினர், சாட்சிகள் முன்னிலையில் ஆஜராகும்போது ------------------ஆண்டின் -------------------ஆம் நாளன்று இந்த ஆவணத்தை நிறைவேற்றுகின்றனர்.

நிறுவுனரின் சார்பாக கையொப்பமிட்டு ஒப்படைக்கப்பட்டது.

(-----------------------------------)

(கையொப்பம்)

------------------------------------------- மாவட்ட ஆட்சியர்,

--------------------------------------------- மாவட்டம்

மாவட்ட ஆட்சியர்,

**சுஞ்சோங்கம் ஜாதக் சிறு,**
*அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் (மு.கூ.பொ).*

(தமிழாக்கம்)

***ந. அருள்,***
*இயக்குநர் (மொழிபெயர்ப்பு) (கூ.பொ),*
*தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை ஆணையரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.